ஓம்
பரப்பிரஹ்மணே நம :

# ஆனந்தபோதினி

" எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு "—திருவள்ளுவர்

(All Rights Reserved.)

| | | |
|---|---|---|
| தொகுதி 2 | பிங்கள௵ வைகாசி௴ 1௳<br>1917-ம்௵ மே௴ 14௳ | பகுதி 11 |

## கடவுள் வணக்கம்.

எத்தனை விதங்கடான் கற்கினுங் கேட்கினுமென்
 னிதயமு மொடுங்க வில்லை
யானெனு மகந்தைதா னெள்ளளவு மாறவிலை
 யாதினு மபிமான மென்
சித்தமிசை குடிகொண்ட தீகையோ டிரக்கமென்
 சென்மத்து நானறி கிலேன்
சீலமொடு தவவிரத மொருகனவி லாயினுந்
 தரிசனங் கண்டு மறியேன்
பொய்த்தமொழி யல்லான் மருந்துக்கு மெய்ம்மொழி
 புகன்றிடேன் பிறர்கேட் கவே
போதிப்ப தல்லாது சும்மா விருந்தருட்
 பொருந்திடாப் பேதை நானே
யத்தனை குணக்கேடர் கண்டதாக் கேட்டதா
 வவனிமிசை யுண்டோ சொலாய்
அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
 யானந்த மான பரமே.

---

இடைந்திடைந் தேங்கி மெய்புள கிப்ப
 வெழுந்தெழுந் தையநின் சரண
மடைந்தன னினிநீ கைவிடே லுனக்கே
 யபயமென் றஞ்சலி செய்துள்
ளுடைந்துடைந் தெழுது சித்திரப் பாவை
 யொத்துநா னசைவற நிற்பத்
தொடர்ந்துநீ யெனையாட் கொள்ளுநா ளென்றோ
 சோதியே யாதி நாயகனே.

---

# ஆனந்தபோதினி

பிங்கள௵ வைகாசி௴ 1௳

## மூவரில் யார் பெரியவர்.

அநாதியா யுள்ளதும், என்று முள்ள இயற்கை யுண்மையின் இரகசியங்களைக் கூறுவதும், அழிவற்றதும், அழிக்க முடியாதது மானதும், குற்றமற்றதும், தெய்வீகத்தன்மை வாய்ந்ததுமாகிய வேதத்தில் அகண்ட பரிபூரண சச்சிதானந்த பரப்பிரம்மம் என்னும் ஏக நாயகனாகிய ஒரே கடவுளே இந்த அண்டாண்ட சராசரங்கள் (உலகங்களும் அவற்றிலுள்ள உயிர்ப்பிராணிகளும், அசையாத சடப்பொருள்களும்) யாவற்றையும் படைத்துக் காத்துத் துடைக்க வல்ல சர்வ சக்தியுடைய பரமனென்றும், மேற்படி முத்தொழில்களோடு திரோபவம் அநுக்கிரம் என்ற இரண்டையும் சேர்த்துப் பஞ்ச கிருத்தியங்களை நடத்துகின்றவரென்றும் கூறப்பட்டிருக்கிறது. ஆயினும், சூக்கும அறிவுடையோ ரல்லாதவர்களும் அலையு மனத்தை யகத்தடக்கி குறித்த நிலையில் நிறுத்திக் கடவுளின் அருள் பெற்றுய்யும் வண்ணம், கடவுளை உருவகப்படுத்திக் கூறிய சந்தர்ப்பத்தில், சிருஷ்டி கர்த்தா மூவர் என்றும் அவர்கள் நாமதேயம் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் என்றும் கூறப்பட் டிருக்கிறது. இந்த ஏற்பாட்டால் பெரும்பாலும் நன்மையே யுண்டாகிற தெனினும் இதனால் வீண் வாதங்களும், சச்சரவுகளும், துவேஷங்களும், தூஷணைகளும்கூட உண்டாகின்றன. சிலர் விஷ்ணுவே பெரியவரென்றும் சிலர் உருத்திரன் என்ற சிவனே பெரியவரென்றும் பத்திரிகைகள் பிரசங்கங்கள் வாயிலாய்ப் பெரும்போர் விளைவிக்கின்றனர். வைணவரில் குறைந்த அறிவுடைய சிலர்சிவனையும், சைவரில் குறைந்த அறிவுடைய சிலர் விஷ்ணுவையும் தூஷிக்கிறார்கள்.

இதில் எது உண்மை யென்பதை யறிந்து ஐயம் நீங்கி ஆண்டவனிடத்தில் பக்திவைக்க வேண்டும் என்ற மெய்யன்புடைய நமது சந்தா நேயரில் ஒருவர் இதைப்பற்றிய உண்மையை யறிவிக்கும்படி நமக்கு எழுதி யிருக்கிறார். ஆதலின் வேதத்தில் கூறியுள்ளபடி ஆன்றோருடைய கருத்து, அதாவது உண்மை யின்னதென்று, நமது

சிற்றறிவிற்குப் புலப்பட்ட வற்றை யீண்டு கூறக்கடமைப் பட்டுள் ளோம். அவை கீழ்க்காணுமாறு.—

மனிதனுடைய கண்ட ஞானத்தால் இவ்வளவென்று அளவிட் டறியொண்ணாத இந்த அண்டரண்ட சராசரங்க ளனைத்தும் ஆக்கி யளித்துத்துடைக்கும் பரம் பொருளாகிய கடவுள் ஒருவரே. எல்லா மதத்தினருக்கும் அவரே கடவுளாயுள்ளவர். ஒரு குடும்பத்திற்கு எஜமானனாயுள்ள பரமதத்தன் என்ற ஒருவனை, அவன் மனைவி கண வன் என்கிறாள், மகன் அவனைத் தந்தையென் றழைக்கிறான், அண் ணன் அடே தம்பி என்று கூப்பிடுகிறான், தங்கையர் தம்பியர் அண் ணன் என்கிறார்கள், தந்தை அவனை மகனே என்கிறான், பாட்டன் பாட்டிமார் பேரப்பிள்ளையே யென்கிறார்கள், மைத்துனன் மைத்துனி அத்தான் அல்லது மாமா வென்கிறார்கள்.

இவ்வாறு அவரவர் ஒவ்வொரு பெயரால் அழைத்தபோதிலும், எல்லாப் பெயர்களையும் தனக்குச் சொந்தமாய்க் கொண்டு, ஏன் ஏன் என்று பதிலளிக்கும் பரமதத்தன் ஒருவனாகவே யிருக்கிறான். அது போலவே எந்தமதத்தினர் எந்த எந்த நாமத்தால் தன்னைத் துதித்த போதிலும் எல்லார் துதிக்கும் இரங்கி, எல்லா மதத்தினர்க்கும் கட வுளாய் நின்று அவரவர்கள் வினைக்கீடாய் பலனை யளிக்கும் சச்சிதா னந்த பரம்பொருளாகிய ஆண்டவன் ஒருவராகவே இருக்கிறார்.

அவருக்கு எந்த உருவமும் ஏந்த நாமமும் இல்லை. உருவமும் நாமமுமுடைய எந்த வஸ்துவும் அழியும் தன்மையதென்று வேதந் தில் திட்டமாய்க் கூறப்பட்டிருக்கிறது. அத்தகைய ஏக நாயகனாகிய கடவுளுக்கே, மேற்கூறியபடி மந்தமதியினர்க்காக உருவமும் நாம மும் கற்பிக்கப்பட் டிருக்கிறது. எவ்வாறெனின், அவர் சிருஷ்டித் தொழிலைச் செய்வதால் அவருக்குப் பிரம்மன் என்றும், இரட்சிக்கும் தொழிலைச் செய்வதால் விஷ்ணுவென்றும், சங்கரிக்கும் தொழிலைச் செய்வதால் உருத்திரன் என்றும் மூன்று பெயர்கள் வைக்கப் பட்டன. அவற்றிற்குத் தக்கபடி மூன்று உருவங்களும் கற்பிக்கப் பட்டன.

இவ்வாறு ஒரே கடவுளுக்கு மூன்று தொழிலால் மூன்று பெயர் கள் வந்தன. திருட்டாந்தமாய் நாராயண அய்யர் என்ற ஒருவருக்கே தொழில் முறைமையில் மூன்று பெயர்கள் இருக்கின்றன. எவ்வா றெனில், இராஜாங்கத்தாரின் நிலவரியை வசூல்செய்யும் தொழிலால் டிஸ்ட்ரிக்ட் கலெக்டர் என்ற பெயர் வந்தது. அவருக்கே குற்ற

விசாரணைசெய்யும் தொழிலால் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் என்ற பெயர்வந்தது. அவரே ஜில்லாவிலுள்ள பாதைகளை மராமத்து செய்யும் லோகல் பண்ட் இலாகாவிற்குத் தலைவராகவும் ஜில்லா சபைக்கு அக்ராசனாதிபதியாகவு மிருப்பதால் அவருக்கே டிஸ்ட்ரிக்ட் போர்ட் பிரஸிடென்ட் என்ற பெயரும் அளிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு மூன்றுபெயரோ டிருந்தாலும் ஆள் நாராயணய்யர் ஒருவரே. எந்தப்பெயரால் கடிதம் எழுதினாலும் நாராயணய்யருக்கே சேரும்.

இப்போது பிர்ம்மா விஷ்ணு உருத்திரன் என்ற மூவராய்ப் பிரித்துக்கூறுவது ஒருவரையே யாதலால், அவர்களில் சிறியவர் பெரியவர் என்று பேதப்படுத்திக் கூறுவது அறிவில்லாத்தன்மையென நன்குவிளங்கும். ஆகையால் சிவன் பெரியவர் விஷ்ணு பெரியவர் என்று வாதாடுவோர் கேவலம் அறிவீனரென்றே விளங்குகிறது. ஒவ்வொரு ஜீவனும் கடவுளின் முத்தொழிலுக்கும் கட்டுப்பட்டதாகவே யிருக்கிறது.

ஆனால் மூவரில் யாரை யுபாசித்தபோதிலும் அவரையே மூலப்பொருளாகிய பரப்பிரம்மம் என்ற பரம்பொருளாகவே பாவித்துத்தான் உபாசித்தல்வேண்டும். அந்தந்தத் தொழில்மட்டுக்கும் உரித்தான தெய்வமாய்க் கருதி உபாசிக்கலாகாது. அப்படி யுபாசித்தால் முக்திகிடையாது. ஏனெனில் அப்போது கடவுள் அத்தொழிலின் அதிகாரத்திற்குத் தக்க பதவியையே யளிப்பார். நமது மனோபாவம் எப்படியோ அப்படித்தான் பலன் கிடைக்கும்.

இப்போது நாம் மேலேகூறிய திருஷ்டாந்தத்தில், ஒருமனிதன் "டிஸ்ட்ரிக்ட் கலெக்டரவர்களுக்கு" என்று ஒரு மனுவெழுதி, அதில் "கந்தன் என்னை வழிமடக்கி யடித்தான். இதை விசாரித்து அவனுக்குத் தண்டனை புரியவேண்டும்" என்று கேட்டுக்கொண்டு அதை நாராயணய்யருக்கு அனுப்பினால், அவரே டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்டிரேட்டாக விருந்தபோதிலும், அந்த மனுவை யங்கீகரிக்கமாட்டார். "நீ டிஸ்டிரிக் மாஜிஸ்டிரேட்டிடம் பிராது கொடுக்கவேண்டும்" என்று பதில் எழுதிவிடுவார். நாராயணய்யருக்குச் சினேகமான ஒருவன் அவரை மற்ற எந்த உத்தியோகப் பெயராலும் அழைக்காமல் நாராயணய்யரே யென்றுதான் அழைப்பான். அவனுக்கு டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்டிரேட், டிஸ்ட்ரிக்ட் கலெக்டர், டிஸ்ட்

ரிக்ட் போர்ட் பிரஸிடெண்ட் மூவர் தயவும் சொந்த கிடைத்த மாதிரியே.

இதனாற்றான் சிவனை யுபாசிப்போர் சிவனையே பரப்பிரம்மமாய்க் கருதுவதால் அதே முதலானதென்றும், விஷ்ணுவை யுபாசிப்போர் அதேகாரணத்தால் விஷ்ணுவே முதலாவதென்றும் கூறுகிறார்கள். நாம் எதை யுபாசிக்கிறோமோ அதுவே மற்றவைகளும் அதுவே பரப்பிரம்மமும் என்று கருதவேண்டுமே யன்றி, இன்னொன்றைத் தூஷிக்கலாகாது. அவ்வாறு தூஷிப்பவன், அதாவது சிவனே முதற் கடவுளென்று துதித்து விஷ்ணுவை ஒருவன் தூஷித்தால் அவன், விஷ்ணுவைத் தூஷித்ததற்குத் தண்டனை யடைவதோடு சிவனைப் பூஷித்த பலனையும் இழந்துவிடுவான். ஒருவன் நாராயணய்யரிடம் சென்று "இந்த ஜில்லா கலெக்டர் மகா நல்ல புண்ணியவான், ஆனால் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்டிரேட் மிக்க பாரபட்சமுடைய மகா துஷ்டன்" என்றால் அவன்நாராயணய்யரைத் தூஷித்தவனாய்மட்டும் கருதப்படுவானேயன்றிப் பூஷித்தவனாய்க் கருதப்படமாட்டான்.

ஆகையால் மூன்றும் ஒன்றே. ஒரு பேதமுமில்லை. உண்மையில் உள்ளது ஒன்றே. அது இவற்றிற்கெல்லாம் அப்பாலுக் கப்பாலாய், மனோவாக்குக் கெட்டாததாய், இப்படிப்பட்டதென்று ஒருவராலும் கூறமுடியாததாய், ஆதியந்தம் ஒப்புயர்வில்லாததாய், என்றுமுள்ளதாய், ஞானமே வடிவாய், எங்கும் நிறைந்து எதிலும் தாக்கற்று, சர்வப்பிரகாசமாய், சுயம்புவாய், என்று முள்ளதாய்ப் பேரானந்தமயமாய் விளங்கியுள்ளது.

அது,

" அரியுமல்ல வரனுமல்ல வயனுமல்ல வப்புறம்
கருமை வெண்மை செம்மையும் கடந்து நின்றகாரணம்
பெரிதுமல்ல சிறிதுமல்ல பெண்ணுமாணு மல்லவே
துரியமுங் கடந்து நின்ற தூரதூரதூரமே "

(சிவவாக்கியர்.)

ஓம் தத்ஸத்.

---

## அன்பு.

ஒருவர் இன்னொருவர்மேல் வைக்கும் பரஸ்பரநேசமே அன்பெனப்படும். புருடனில் பெண்சாதிவைக்கும் அன்பும், அவனில் ஓர் சிநேகிதன் வைக்கும் அன்பும் ஒரே தன்மையுள்ளன வல்ல. ஆனதுபற்றி அன்பு வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு நாமகாரணங்களுடன் விளங்கும். மனிதர் கடவுளில் வைக்கும் அன்பிற்குப் " பக்தி " யென்றும், அவர் அடியாரில்வைக்கும் அன்பிற்குக் " கிருபை " " கருணை " யென்றும், மனைவிமணாளனில் வைக்கும் அன்

பிற்குக் "காதல்" என்றும், பெற்றோர் பிள்ளைகளில் வைக்கும் அன்பிற்குப் "பாசம்" என்றும், ஒருவன் தனது மித்திரனில்வைக்கும் அன்பிற்கு "நேசம்" என்றும் சொல்லப்படும்.

இவ்வுலகிலுள்ள மாந்தருள் எப்படிப்பட்டவரேயாயினும் அன்பென்னும் வலையை யவர்கள்மேல் வீசினால் நிச்சயமாக அகப்படுவார்கள் என்பதிற் சிறிதேனும் ஐயமில்லை. சுருக்கமாகச் சொல்லப்புகின், சாட்சாத்பகவானும் அன்பென்னும் வலையாகிய "பக்தி" யிற் பிடிபடுவரென்றால், மற்றையோரைப் பற்றி யெப்படிப் பேசுவல்! அன்பிற்கு "இன்சொல்" முக்கியசாதனமாயிருக்கிறது. இன்சொல் யார்மாட்டுக் காணப்படுகிறதோ, அவர்மாட்டு அன்பு காணப்படும். அன்பும் இன்சொல்லும், நகமும் சதையும்போலவும், பூவும் மணமும்போலவும், பிரிவற்ற மித்திரர்களாக விருக்கின்றன. இன்சொல்லால் ஒருவனைத் தன்மாட்டு அகப்படுத்திக்கொள்ளலாமேயன்றி வன்சொலாலாகாது. இன்சொல்லில்லாத இருதயங்களைப் பாலைவனத்திற் கொப்பிடலாம். அவ்விருதயத்திருந்தும் வெளிப்படும் சொற்கள் ஒவ்வொன்றும் கூரிய அம்பினும் மிக்கதாக இன்னொருவன் மனதைப் புண்ணாக்கத்தக்கன.

"தீயினாற் சுட்டபுண் ணுள்ளாறு மாறாதே
நாவினாற் சுட்டவடு." (குறள்.)

வன்சொல்லாளரிடம் ஒருவரும் சகவாசம் செய்யார்கள். அன்னவர் கோடீசுவரர்களாயிருந்தபோதிலுங் கூட ஏனையோரால் ஒருபொருட்டாக மதிக்கப்படமாட்டார்கள். "அன்பான இருதயமே அருளுக்கு வழி." அன்புடையோன் வறியவனாயிருந்தபோதிலும் யாவராலும் நன்குமதிக்கப் படுவானேயன்றி யவமதிக்கப்படமாட்டான். இன்னும்:—

"இன்சொல் விளைநிலனா வீதலே வித்தாக
வன்சொற் களைகட்டு வாய்மை யெருவட்டி
யன்புநீர் பாய்ச்சி யறக்கதி ரீனவோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்"

என்பதனால், இன்சொல் அன்புக்கு எவ்வளவு அவசியமானதென்று புலப்படும். மேலும் அவ்வன்பானது இடைவிடாது பாய்ந்துகொண்டிருக்கும் "கருணை" நீரோடை யெனப்படும். ஓர் நீரோடையானது சீவராசிகட்கு எவ்வளவு நன்மையைச் செய்கின்றதோ, அவ்வளவு நன்மையை அன்பானது மனிதருக்குப் பயக்குகின்றது. மனிதவர்க்கத்தில் அன்பில்லாதவன் இருந்தென்னை? இறந்தென்னை? அன்றியும் அவன்வீட்டில் சாப்பிடுவது பெரும்பாவமே.

"ஒப்புடன் முகமலர்ந் துபசரித் துண்மை பேசி
யுப்பிலாக் கூழிட்டாலு முண்பதே யமுதமாகும்
முப்பழமொடுபா லன்னம் முகங்கடுத் திடுவாராயின்
கப்பிய பசியும் போகாக் கடும்பசி யாகுந்தானே."

என்னுஞ் செய்யுள் கவனிக்கத்தக்கது. உலகில் நடக்கும் ஒவ்வொரு விஷயங்கட்கும் அன்பு ஏதுவாயிருக்கிறது. அன்புடையோன் ஒவ்வொருவனையும்

தனது சகோதரனாகப்பாவிப்பான். அன்பில்லாதவிடங்களிற் குற்றங்கள் எண்ணிறந்தன தோன்றும்.

" வேண்டாப்பெண்டீர் கால்பட்டால் குற்றம்
கைபட்டால் குற்றம் "

புருடரிடத்திலும் பார்க்கப் பெண்களிடத்தில் அன்பு அத்தியாவசியகமா யிருத்தல்வேண்டும். இயற்கையில் பெரும்பான்மையும் ஸ்திரீகள் அதிக சீவகாருண்ணியமுடையவர்களாகக் காணப்படுகிறார்கள். அதிலும் கல்விகேள்விகளால் மேம்பாடடைந்த ஸ்திரீகளாயிருப்பின் அதிஊக்கமாக இதைக் கடைப்பிடித்து ஒழுகுவார்கள். கணவர் தம்மேல் பிணக்குற்றிருந்தபோதிலும் அவர்கள் அஞ்சுகம்போற் கொஞ்சிப்பேசும் சொற்கள் கணவரின் பிணக்கத்தையகற்றி யிணக்கத்தைக் கொடுக்கின்றனவன்றோ. இப்படிப்பட்ட அன்பின் சிறப்பை யெப்படி யானொரு நாவாற் புகல்வேன்.

இவ்வுலகில் தயை, தாட்சணியம், சீவகாருண்ணியம் தங்கப்பெற்ற ஸ்திரீகளு மிருக்கிறார்களென்று சொல்லுமிடத்து, குறித்ததன்மைகளில்லா வன்னெஞ்சிகளு மிருக்கிறார்கள் என்பது உலகமறிந்தவிஷயமே. ஆனால் அவர்களின் கதியைப்பற்றி யோசிக்கின் அதோகதியாய்த்தான் முடியும். சீவகாருண்ணியமில்லாரிடத்து அன்பில்லை. அன்பில்லாரிடத்தில் கற்பில்லை. அன்பில்லாரிடத்தில் ஏன் கற்பில்லையென்று சிலர் ஐயப்படக்கூடும். ஆனால் ஸ்திரீகள் தங்கள் கணவரை அல்லும் பகலும் குறைகுற்றம்வாராது யுபசரிப்பதே பதிவிரதா தர்மம் என்னும் அவர்கள் விரதம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் கணவரிடம் அன்புவையாவிடில் எப்படிப் " பதிவிரதா தர்மம் " அவர்களிடம் தோன்றும். இதனால் பெண்களிடம் அன்பில்லாவிடில் அவர்கள் கற்புநெறியினின்றும் தவறினர்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் யாவர்க்கும் பிரத்தியட்சக் காட்சியாகத்தோன்றும்.

அன்பிலும், கற்புநெறியிலும், பதிவிரதாதர்மத்திலும் மேம்பாடுடையவர்களும், தற்போதும், எப்போதும் உலகமாதாவால் வாழ்த்தப்படுகிறவர்களுமாகிய உத்தமிகளில், சாவித்திரி தன்பிரிய கொழுநனை யந்தகனிடத்திருந்தும் தனது பதிவிரதா தர்மத்தாலல்லவா மறுபடியும் மீட்டுவந்தாள். அன்றியும் நளாயினியானவள், புருஷனாகிய கௌசிகன் குஷ்டரோகத்தால் பீடிக்கப்பட, அவள் சிறிதும் வெறுப்பின்றி, அவருடைய சீழ், மலமுதலியவற்றை வாரிக்கொட்டினளன்றோ. இன்னும் அவள் கற்பின் மகிமையினாலல்லவா உலகெங்கணும் பிரகாசிக்கச் செய்யும் சூரியனும் கட்டுண்டான். பின் யார்தான் அவள் வல்லமையைப் போற்றவல்லார்! மேலும், இவர்களைப்போன்ற கற்பினிற் சிறந்த உத்தமிகளின் சரிதையை யெழுதப்புகி னிச்சஞ்சிகை யிடந்தராததுபற்றி விடுத்தனன்.

கற்பு, நோன்பு, தவம், யாகமுதலிய நெறிகட்கெல்லாம் அன்பானது வழிகாட்டியாக விருக்கின்றது. பெரியசக்கிராதிபத்தியங்களை யெல்லாம் ஓர் குடை

யின்கீழிருந்து செங்கோலோச்சிவரும் சக்கரவர்த்தியானவர், தனது பிரஜைகளிடத்து அன்பில்லாமை காரணமாக கொடுங்கோலோச்சுவாராயின், பிரஜைகள் யாவரும் ஒரே மனதாய் அவனை யொழிக்க முயல்வார்கள். அல்லது ஞானவான்களா யுள்ளவர்கள்

" கொடுங்கோன்மன்னன் வாழுகாட்டிற்
கடும்புலிவாழுங் காடுநன்றே " என்ற

ஆன்றோரின் அமுதவாக்கிற்கிணங்க நாட்டைவிட்டுக் காட்டையடைந்து காய் கனி கிழங்குகளைப் புசித்து இன்புற்றிருப்பார்கள். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள் ஓர் இராசாங்கத்தில் நேருமாயின், அதை ஆளப்பெற்ற அரசன் " குலாலன் சக்கரத்திலகப்பட்ட மண்போல் " போகும் வழிதெரியாமல் நின்று தியங்கித்தவிப்பான். இவை யெல்லாவற்றிற்குங் காரணம் அவனின் கொடுங்கோன்மையே. அவன் செங்கோலோச்சுவானுயின் யாதொரு கலவரமுமின்றி, பிரஜைகள் அதிக சந்தோஷித்தார்களாக அவனிடத்தில் பதின்மடங்கு அதிக பட்சம்காட்டியும், நன்றியறித துள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

" அன்பும் சிவமு மிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்திலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருப் பாரே" என்ற திருவாக்கால் கடவுளை நம்மிடம் அன்புருவமாகத் தான் அமர்ந்திருக்கிறார் என்று ஏற்படுகிறது.

ஆதலால் சகோதர சகோதரிகளே !

நாமெல்லோரும் அன்பென்னும் நெறியைப் பிடித்து, அதன்வழியே சென்று, பகவானில் என்று மன்புவைத்து " பக்தி " யை நாளொருமேனி பொழுதொரு வண்ணமாக வளர்த்து வருவோமாயின், இம்மையில் மழுங்காக் கீர்த்தியையும், புருஷார்த்தங்களாகிய அறம், பொருள், இன்பம், என்னும் மூன்று சுகங்களையு மனுபவித்து, மறுமையில் என்றும் சந்தோஷத்தைப் பயக்கும் பெருவாழ்வையு மெய்துவோ மென்பதிற் சிறிதேனும் ஐயமின்றும்.

---

## கல்வியைப் பற்றியது.

'கற்றோர்க்குச் சென்ற விடமெல்லாஞ் சிறப்பு' என்றது நம் நாட்டில் வழங்குமோர் பழமொழி, புஸ்தகங்களைக் கொண்டு பாடசாலைக்குச் சென்று கற்கும் படிப்புதான் கல்வி யென்று சிலர் கூறுகின்றனர். தச்சுவேலை, தட்டாரவேலை, நெசவுவேலை, முதலியவைகளும் கல்வியின் ஓர் பகுதி என்பர் அறிஞர். கற்கப்படுவது கல்வி யென்று கூறுதலால், ஒருவன் எவ்விதக் கல்வியேனும் கற்று அதில் சிறந்து விளங்குவானேயாகில் அவன் அக்கல்வியில் சிறப்புறுவன் என்று கூறுதல் ஒன்றும்.

கல்வியானது இன்பம், சிறப்பு, சாமர்த்தியம் முதலியவற்றைத் தருவதில் பிரயோசனப்படுகிறது. இன்பம்தரும் பயன் விசேஷமாய் ஏகாந்தத்தினும்,

சிறப்பைத்தருவது பேச்சிலும், சாமாததியததைத தருவது காரிய நிர்வாகத்திலும் தோன்றுமென்பது ஆன்றோரின் கொள்கை. வழக்கப் பட்டவர்கள் தனித்தனி யாய் ஒரொருவிஷயத்தைச் செவ்வையாய்நிதானித்து நடத்துவார்களாயினும், எல்லாக்காரியங்களையும் சீர் தூக்கிப்பார்த்துத் தகுந்த ஆலோசனைசெய்து அவற்றை யொழுங்காய் நிறைவேற்றுவது. கல்விமான்களிடத்தேயே வெகுவாகத் தோன்றுகிறது. மேலும், கல்வியை அநுபவத்தால் மட்டுப் படுத்தாவிடில் அது நிலைக்கு நிற்கமாட்டாததாகும். ஆட்சேபிக்கவும், நிராகரிக்கவும், நம்பவும், விசாரணையின்றி சுவீகரிக்கவும், பேசவும், பிரசங்கஞ் செய்யவும் ஆராயுஞ் சிந்தை யுண்டாகும்படி செய்து கொள்ளல் நன்று.

சில புஸ்தகங்களை ருசிமாத்திரம் பார்க்கவும், சிலவற்றைப் பற்படாமல் விழுங்கவும், மற்றுஞ் சிலவற்றைக் கடித்து மென்ற பின்னர் உள்ளே செலுத்தலும் வேண்டும். அஃதெங்ஙனமெனில், சில புஸ்தகங்களில் சிற்சில பாகங்களை மாத்திரம் வாசிப்பது போதும். சிலவற்றைச் சிந்தை கூர்ந்து வாசிக்க வேண்டுவதில்லை. மற்றும் சிலவற்றையோ ஆதியோடந்தமாய்ச சுறுசுறுப்போடும், வாசித்தாலன்றி பொருள்படா. இவ்வித வாசிப்பு ஒருவனைப் பூர்த்தியாக்கும் பேச்சில் ஆயத்தப் படுத்தும், எழுத்தில் கசடறச்செய்யுமென்க.

மானுடருக்குக் சரித்திரத்தினால் விவேகமும், காவியங்களினால் யூகமும், கணிதத்தால் நுட்பமும், தத்துவ சாஸ்திரத்தினால் ஆழ்ந்த சிந்தையும, ஒழுக்க நூலால் பயபக்தியும், நியாயவாணி இலக்கணங்களினால் விவாத சாமர்த்தியமும் உண்டாகிறது. இதனால்தான் ‘நடவடிக்கை கல்வியை அநுசரித்திருக்கும்’ என்று முதியோர் கூறியுள்ளார். மற்றும் ‘கல்வி யழகேயழகு’ என்றதனால் ஒருங்கே கெழீஇய ஏனை யழகுகள் எல்லாம் இக்கல்வி யழகொன்றற் கீடாகா வென்பது நன்கு விளங்கும்.

வித்தையானது தாயைப்போல ரக்ஷிக்கிறதென்றும், தகப்பனைப்போல மேன்மேலும் விருத்தி யடைகிற நல்வழியில் நடக்குமாறு ஏவுகிறதென்றும், மனைவியைப்போல் விசனத்தைப் போக்கடித்துச் சுகத்தைக் கொடுக்கின்றதென்றும், பத்து †திக்குக்களிலும் கீர்த்தியைப் பரவச் செய்கிறதென்றும் கல்வி கற்பக விருக்ஷத்தைப்போல் எப்பொருளையும் கொடுக்கக்கூடிய வல்லமை யுடையது என்றும் ஆன்றோர் கூறியுளர். அவ்வாறின்றி கல்வியை வாய்புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்றவாறு கபடிகள் இகழ்வது பேதமையாகும்.

ஒருவனது யுக்தி நிலையற்று அலைகிறதா யிருப்பின் அவன் கணித சாஸ்திரம் கற்றல் நன்றாய் முடியுமென்ப. எங்ஙனமெனில், கணித சாஸ்திரத்தில் திருஷ்டாந்தரங்கள் படிக்கும்போது மனம் அணுவளவு பிசகினால் அவைகளை மீண்டும் முதலிலிருந்துப் படிககவேண்டிவரும். ஒருவன நுட்பபேதாபேதஙகளை வகை தெரிந்து அறியமாட்டாதவனா யிருந்தால் அவன் தர்க்கம் வாசித்துத் தனது குற்றத்தைப் போக்கிக்கொள்ள வேண்டும். காரியங்களை அடிக்கடி சிந்தித்துப்

† அஷ்டதிக்குகள்—8, பூமி 1, ஆகாயம் 1 ஆக பத்து.

பார்த்து ஒன்றைக் கொண்டு மற்றொன்றை ருசுப்படுத்தவும், திருஷ்டாந்தப்படுத்தவும், ஒருவனுக்கு யுக்தி சாமர்த்திய மில்லாம லிருந்தால், அவன் நல்ல வக்கீல்களுடைய வியாச்சிய விஸ்தாரங்களில் பழகி வருதல் நன்று என்பார்கள். இவ்வண்ணமே ஒவ்வொரு வகையான யுக்திக்குறைவுக்கும் அதற்கேற்ற நிவாரணம் செய்து கொள்ளுவார்களே யாயின் மாந்தர் சுகமுற்று வாழ்வதற்குச் சாதகமாகு மென்பது திண்ணம்.

'ஓதாதார்க்கில்லை உணர்வொ டொழுக்கம்!

என்றார் ஔவை பிராட்டியாரும்.

---

## "ஒப்புற ஒழுகு"

இம்மானிலத்தில் இதுகாறும் வசித்துவந்த முற்றிலும் கல்வியில் கற்றுணர்ந்த கனவான்களது நடத்தையையும், மனோரதத்தையும், செவ்வனே உணர்ந்து அவைகளைப் பின்பற்றி நாமும் நடக்க முயலவேண்டுமென்பதே "ஒப்புற ஒழுகு" என்ற ஆன்றோர் அமிர்தத்திற்கொப்பான வாக்கியத்திற்குத் தகுந்த பொருளென எனது சிற்றறிவிற் கெட்டியவாறு புலப்படுகின்றது. அப்படி நடப்பதற்கு சாஸ்திரஞானம் அவசியம் என்று கூறவும்வேண்டுமோ? ஆனால், கல்வியில் தேர்ந்தவனா யிருந்திடினும் ஒருவிஷயத்தில் பிரவர்த்தித்துவிட்டு, சஞ்சலம் என்னும் சாகரத்தில் கரைசேரத்தெரியாது நீந்தித் தத்தளித்துக் கொண்டிருக்கும் தருணத்தில், தான் பிரவர்த்தித்த அப்பேர்ப்பட்ட நல்ல ஒழுக்க விஷயத்தில் 'பெரியோர்கள் எவ்விதம் நடந்திருக்கின்றனர், அதைப்போல் நாமும் செய்தால் கெடுதி ஏதேனும் உண்டா? நன்மை ஏதேனும் உண்டா?' என்பதைச் சற்று ஆய்ந்தோய்ந்து உணர்ந்தே செய்யத்தக்கதே ஒழிய, மற்றப்படி சந்தேகமா யிருக்குந் தருணத்தில், பெரியோர்கள் கூறியவற்றைத் தவறாக ஊர்ந்து பின்பற்றமுயலாது, சாஸ்திரங்களின்படி நடப்பதே உசிதமாகும்.

மாக்ஷிமைபொருந்திய ஸ்ரீகிருஷ்ணபகவான் ஒருசமயத்தில் கோபஸ்திரீகளுடன் சுகமாக விருந்ததாகக் கூறியிருக்கிறதல்லவா? நமது ஆதி ஸ்ரீமத் சங்கராசாரியார், மதுபானம்செய்ததாக சொல்லியிருக்கிறதல்லவா? பதிவிரதா பக்த மாது சிரோன்மணியான திரௌபதை பஞ்சபாண்டவர்களுள் ஒவ்வொருவரையும் பன்னிரண்டுமாதம் வரையில் அடைந்தபின்னர், தன் தேகத்தை அக்னியில் வீழ்த்தி பரிசுத்தமாகச்செய்து, மறுபடியும், இப்படியே ஒவ்வொருவராக அவ் வைவரையும் அடைந்ததாகச் சொல்லவில்லையா? அக்னி இல்லாமல் நாம் ஜீவித்திருக்கமுடியுமா? அக்னி நல்லபதார்த்தங்களையும் எரிக்கின்றது; கெட்ட பதார்த்தங்களையும் எரிக்கின்றது அல்லவா? கெட்ட பதார்த்தங்களை எரிக்கிற அந்த அக்னி அசுத்தமாகையால், 'இது எதற்காக?' என்று அது இல்லாமல் ஜீவிக்கமுடியுமா? 'பசியினாலல்லவா இக்கொடும் வயிறு என்னைத் துன்பப் படுத்துகிறது. இதற்காகத்தானே திரவியம் தேடி அன்னமளிக்கிறது. பசியில்லாது வயிறு இருக்குமா? ஆகையால், வயிற்றைமட்டும் அறுத்துவைத்து

நாம்மட்டும் பசியின் ' துன்பமில்லாது சௌக்கியமா யிருப்போம் " என்றால் எப்படிமுடியும். கடவுள் நம் எல்லோரையும் சிருஷ்டித்திருக்கிறார். எல்லோர்க்கும், பக்ஷபாதமின்றி ஒரேவித புத்தியையும் அளித்திருக்கின்றனர். அப்படியிருக்க, ஒருவனிடத்திலேயே நற்குணமான நற்செய்கைகள் அநேகம் இருந்தாலும், ஏதாகிலும் ஒரு தீயகுணம் இருந்தே தீரும் என்பதை அநுபவத்திலேயே அறிவாளிகளாகிய நீங்கள் அறிந்திருப்பீர்களல்லவா ? ஆகையால் ஒருவனுடைய நற்குண நற்செய்கைகளையே எடுத்துப் புகழ்ந்து அப்படியே நாமும் செய்ய முயலவேண்டுமே ஒழிய, ' அவர்கள் அவ்விதமாகச் தீயசெய்கைகளை செய்திருக்கிறார்களே. நாமும் அப்படியே செய்வோமே,' என்றால், பகுத்தறிவு இருப்பவர்கள் அப்படிக் கூறமாட்டார்கள் என்பதே எனது அபிப்பிராயம்.

அப்படிப் பெரியோர்கள் செய்கைகளின் இரகசியத்தை அறியாது, நிச்சந்தேகமா யிருக்கையில் அதே சந்தர்ப்பத்தில் அப்படியேசெய்தால் கிஞ்சித்தும் கீர்த்தி அடையாது அபகீர்த்தியே அடைவான் என்பது நிச்சயம். எதற்கும் ஒருவித எல்லையுண்டு. 'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷமாகுமன்றோ ! என்பதை அறியவேண்டுமோ ? ஸத்யஸந்தனான ஹரிச்சந்திரன் அடாதுசெய்து படாதுபட்டு, அந்தத்தில் சத்தியத்தை நிலைநிறுத்தவில்லையா ? சிற்சில சமயங்களில் உண்மை உரைக்கினும் பொய்யாகவே ஆகிவிடும். சிலசமயத்தில் பொய் சொன்னபோதிலும் உண்மையாகவே ஆகிவிடும். இவைகள் எல்லாம் நாம் அநுபவத்திலே பார்க்கத்தக்கவை யாகும். பெரியோரைப்போல நடப்பதும், முதலிலேயே, சொல்லத்தகாத வார்த்தைகளைக் கூறிவிட்டுப் பின்னர் ஒப்புற ஒழுகுவது அசாதாரணகாரியமென்று பின்வரும் கதையினின்றும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும்.

வெகுகாலத்திற்கு முன், புராதனபுரி என்றோர் நகரமுண்டு. அவ்வூர் ஜனங்கள் மிகவும் தயாளசிந்தை யுடையவர்கள். அவர்களுள் குணபூஷணன் என்று ஒருவன் ஸத்யஸந்தனாக இருந்தான். ஒருநாள், அவ்வூருக்குக் கொள்ளைக்காரர்கள் வருவதாக கேள்வியுற்ற அவ்வூர் ஜனங்கள்தங்கள் அருமையான ஆடை ஆபரணங்களை ஆங்குதோன்றிய பொந்தினுள் புதைத்து, அந்நாட்டைவிட்டகன்று, காட்டிற்குச்சென்று ஒதுங்கிக்கொண்டனர். ஆனால், முன் சொன்ன குணபூஷணன் என்பவனுக்கு ஒருவித ஆடை ஆபரணமுமில்லாததால், ஸத்யத்தையேஆபரணமாக அடைந்த அவன், கொள்ளைக்காரர்களுக்குப் பயந்துகொண்டு பதுங்காமல், ஒரு தெருத்திண்ணையில் படுத்து தூங்கினான். குறிப்பிட்டதினத்தில், கொள்ளைக்காரர்கள் புராதனபுரிக்குவரவே ஒருவரையும் காணாது திகைத்து நிற்க, பின்பு, குணபூஷணன் தெருத்திண்ணையில் படுத்துறங்குவதைக் கண்டு, மனமகிழ்ந்து விரைந்துசென்று அவனைத் தட்டி எழுப்பி ' இவ்வூர் ஜனங்கள் எங்கே ' என்று கேட்க, அவன் முன்பின் யோசியாது, ஒளிந்திருக்கும் இடத்தை உண்மையாகவே கூறினதால், அக்கொள்ளைக்காரர்கள், கோபாவேசம் அதிகரித்து, காட்டிற்குச் சென்று, அச்சனங்களைக் கொலைசெய்தார்கள். இவன் பெரியோர் நடத்தையை பின்பற்றாது சாஸ்திர ஒழுங்கின்படி நடந்து,

பெரும்பாபத்தை ஏற்றுக்கொண்டான். ஆகையால், பெரியோர்கள் ஒழுங்கின்படி நடக்கும்பொழுது, முதலிலேயே முன்பின் யோசித்துப்பேசாது, பின்னர் ஒப்புற ஒழுகுவது அசாதாரண காரியமேயாகும் என இக்கதையினின்றும் அறிவீர்களாக.

---

## சசிவர்ணபோதம்.

(411-ம் பக்கத்தொடர்ச்சி.)

இன்னமுங் கேள். எக்காலத்தும் வடாவளம் பெற்றோங்கி அநந்தகோடி சகத்தும் நிறைந்து வளர்ந்து பெருகி விளங்கும் ஓடதிகளையும், அவைகட்கு இலக்காயும் இறையாயும் விளங்கிவரும் மருத்துவக் கடவுளாரின் மனவமைதியையும், மயக்கஞ்செய்து மாயாம்ச மகிமையால் மன்னுயிர்களின் பூத உடம்புகளினுள்ளே நுழைந்து தத்துவங்களையும் புலன்களையும் அடக்கி, அகத்தே தகித்துப் புறத்தே பெரிதறு, மும்மையாதியாக மோசக்கூட்டமாய் விளங்கும்.

வாதபித் தங்குன்மஞ் சீதங்குளிர் சுரம்
　　வயிற்றுக்க டுப்புழலம்
மதுமேக கயரோக மார்படைப் புப்படை
　　வலிப்பொடு சூலைப்பிழுப்பு
பேதமிகு குத்தற்கு டைச்சற் சிரங்குடன்
　　பீனசஞ் சீதபேதி
பெருவயிரக் கட்டுவலி மந்தார காசமும்
　　பீளைவழியுங் கண்வலி
கோதுதரு நீரிழிவு குமரகண்டம்பெருங்
　　குட்டரோகங் குலைவலி
கோரமிகு கயமாலை விதைவாதம் விஷபாண்டு
　　குணமிலாக் கக்கலிருமல்.

(கொல்லிமலைக் கந்தன் றுதி)

என்னும் எண்ணிலாப் பிணிகளாற் பொங்கும் புலவுநாற்றங் கமழப் பெற்றதிப் பிறவிப் பெருங்கடல்.

சசிவர்ண ! இப்பிணி எவரையும் விட்டதன்று. வாத பித்த கபங்கொண்ட முப்பாலாகிய இப்பிணிகளுஞ் சேர்ந்தேதான் தொண்ணூற்றாறு தத்துவங்களைப் பெற்ற இவ்வுடலம் உண்டாகிறது. இருகுணங்களாலும் மும்மலங்களாலும் தூண்டப்படுவனவாகிய எண் விகாரங்களால் சாக்கிர சொப்பனங்களில் மனோவாக்கு காயங்களால் தெரிந்துசெய்யப் படுவனவாகிய தீயத்தொழில்களுக்குத் தக்கவாறு

தெண்டனை செய்விப்பதற்காகவே தனுவுக்குடைய தத்துவங்களோடு இப்பிணிகளையும் சேர்க்கப்பட் டிருக்கின்றது.

மேற்கூறிய குணங்களாகிய ரஜம், தமம், மலங்களாகிய ஆணவம், மாயை காமியம், விகாரங்களான காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம், மனம், வாக்கு, காயங்கள், ஆகப் பதின் மூன்று இந்திரியங்களின் மத்தியில் உள்ள ஓர் நிலையில் இப்பிணிகள் மூன்றும் சேர்ந்துவைகும். இவ்விந்திரியங்கள் தத்தம் தொழில்களைச் செய்யத்தொடங்கி சலித்து எழுங்காலத்தே ஆங்கு நெருங்கி வைகிய பிணிகள் பெருகிப் பரவி உடலெங்கும் நிறைந்து உயிரோடு முரணிப் பல்வகையானும் தேகத்தைப் பிடிங்கித் தின்றுவிடும்.

ஆகையால் எக்காலத்தும் எவ்வாற்றானும் ஆக்கையூடு ரோகங்களைப் பரவவொட்டாமல் சத்துவகுணங்கொண்ட சாந்தசீலத்தை முன்னிட்டுச்செய்யும் மனோவாக்கு காயங்களின் செய்கைகளால் மேற்கண்ட பிணிகளை வரவர நெருக்கிக் குறைத்துவரவேண்டு மென்கிற நியதியை யறிந்து அவ்வாறு நிற்றல்வேண்டும்.

என்னை! உயிர் நீங்கிய பிறகு நாயோ நரியோ, பேயோ, கழுகோ, பிடிங்கித்தின்னு மிவ்வுடலத்தை, விகாரங்களால் விருத்தியாகப் பெற்ற விப்பவப்பிணிகள் உயிரோடுள்ள உடலத்தை உட்கொண்டுவிடு மென்றால், இக்கொடிய நோய்களின் கொடுமைகளைக் கூறவும் வேண்டுமோ?

மேலும் இதயத்தே ஓர் சாட்சிபூதமாய் மனோகோச மயத்தே நின்று அக்கினிச் சுவாலைபோல் அங்குமிங்கும் ஓடி அன்னகோசத்தை யடைந்து ஐம்புலன்களின் வழியாய் வெளிபோகி பற்பல ஜனனங்களிலும் பார்த்துப் பார்த்துச் செய்து அனுபவித்து ஆண்டு பரந்துழன்ற பாசங்களென்னும் வாசனையால் மீண்டும் மீண்டும் எண்ணத்தகாதனவும் எண்ணி யெண்ணி யுழன்று ஓடோடி அவனிமுழுதும் ஆலாய்ப் பரந்து சுற்றத்தார்மீது சூழ்ந்து அன்னை தந்தையரை யவாவி மனையாள் விழைவு மன்னி புத்திரவாஞ்சையிற் போந்து கவலை பெரிதாகி நொந்து மிகவாடி மண்ணாசையால் மயங்கி பெண்ணாசைகளைப் பெருக்கிப் பொன்னாசைகளிற் பொங்கி அறிவானந்தங்களையடக்கி முறை மாறி மாறி யுழலும் பேயாகிய மனமெனும் ஓர் பெரிய திமிங்கிலம் உலவாநிற்கப்பெற்ற இப்பிறவிப் பெருங்கடல்.

ஹே! விஞ்ஞானோதய ஹிருதய! பத்தத்தினின்றிடாத பாழ் மனஞ் சற்றுமிந்த சித்தத்தி னின்றிடாமற் றிரிகிற துண்மை யென்

பதை நீ உள்ளவாறு உணர்ந்தவன். துன்மதியின் தூண்டுகோலான் மயங்கி அஞ்ஞானமடைந்து அல்லலும் அவதியும் பட்டு அலையுமிந்த மனப் போக்கின்படி செலுத்திவிடாமல் தன் அறிவை மனோகோசத்திற் செலுத்தி அவ்வறிவுசெல்லும் மார்க்கத்தே மனத்தைச் செலுத்திச் செலுத்தி யிழுத்துத் தன்னிடத்தே இருத்தப் பழகவேண்டும்.

சசிவர்ணு! இங்கு ஓர் விஷயம் கவனிக்கத்தக்கது. இதோ பார்!

ஓர் விஷயத்தைப்பற்றித் தனக்குத்தானே தனித்து யோசித்துக்கொண்டிருக்க ஓர் கணநேரத்தின் காற்பங்குக் குள்ளேயே தன்னை யறியாமலே தமோகுணத் தேவியாகிய (மடமை) யென்னும் தையல்தோன்றித் தடுப்பதால், அதைவிட்டு வேறு விஷயத்தில் மனம் நாடி அதைக் கடைப்பிடித்து மற்றோர்விஷயத்திலும், அதை யனுசரித்துப் படிப்படியாய் இவ்வாறே பலவிஷயங்களிலும் சென்று யோசித்து யோசித்து முதல் தொடங்கியது ஒன்றும் முடிவது வேறொன்றுமாக நிகழ்ந்து, அதுவரை தமக்குக்கிடைத்த சாவகாசத்தை வீணே யிழந்து ஏமாந்து போய்விடுவது எவருக்கும் இயல்பே! இச்சம்பவமானது எதையும் யோசித்து அறிந்துகொள்ளும் புத்திமான்களின் அனுபவமாகும். இவ்வனுபவமானது விஷயங்களிலும் முயற்சியிலும் கண்ணுங் கருத்தும் வையாத மறதியின் குணத்தாலாவதாம்.

இதற்கென்ன செய்வது? கவனித்துக் கேள் விஷய வாராய்ச்சிகளின் தொடக்கத்தே நன்மனது நாட்டி, என் சித்தமிசை குடிகொண்டவறிவான தெய்வமே! நான் ஒன்றை ஆலோசித்து முடிவு செய்த விஷயப்பெருக்கங்களால் (நின்னையறிய) என் மனம் சிதறு வண்ணம் நீ திருவருள்புரியவேண்டும் என்று சிந்தித்துத் தொடங்கு. அவ்வாறு சிந்திக்க யோசிக்கத்தொடங்கிய பிறகு (வரையறுத்து நிரூபித்துக்கொண்ட ஓர்காலத்துக்குள்) தொடக்கத்தே தோன்றும் மாற்றங்கள் யாவை? இடையில் வந்துதடுக்கும் வேறுவிஷயங்கள் யாவை? என்பதைக் கவனித்துக் கணக்கிட்டுக்கொள். கணக்கிட்ட மாறுதல்களை அவ்வக்கணமே கடிந்துவிடு. மனத்தேதோன்றிய அவசியமானவைகளைத் தொடர்ந்த சந்தர்ப்பங்களோடு துணைகூட்டிப் பெருக்கி கவனமாயும் முயற்சியாயும் விஷயங்களின் மேற்செல்லு. இவ்வாறே பழகிப் பழகி வழக்கத்திற்குக்கொண்டுவா. சிலகாலத்தே

ஒரேவழியான ஊக்கம் உனக்குத்தோன்றும். பிறகுதான் எண்ணத் தலைவனை யறிந்து ஒழுக ஏது வுண்டு.

ஹே பால! இம் மனப்பாங்கைப்பற்றிப் பற்பல சந்தர்ப்பங் களிலும், பற்பலவாறுகப் பகரக்கேட்டனை. அவைகளோடு இதனை யும் ஏற்றுக்கொள். இத் தன்மையைப்பற்றி உனக்குச் சந்தேகந் தோன்றுமிடத்தே தடுத்துக்கேள். தேர்ந்து சொல்லி, சொல்லின் உண்மையைத் துளக்கியிட்டுத் தோன்றுவிடத்தே கேட்கத் தொடங் குங்கால் அவைகள் அறியாவினுவாகவும் ஐயவினுவாகவும் இருத்தல் வேண்டும். அவைகளை ஏற்கத்தகுந்தவை, அறியத்தக்கவை, அவ சியமானவை.

இனி முற்றொடர்ச்சியை மொழியக் கேள்! உலகத்தே ஒருவர் படைத்த செல்வவள நலங்களைக் கண்டு பொருந்தாது பொங்கிப் புழுங்கி ஆ ஆ வென்றலரி கோவென்று கூவிக் கூக்குரலிட்டுக் குலைந்து அழன்றலைந்து அவமதித்துக் கூறி அதனுலெய்து மனலை யருந்தி அசனமிரங்காதான்றி அழுதழுது முக்காடிட்டு மெய்ம்முடிச் சிலிர்த்துக் கண் சிவந்து நெட்டுயிர்ப்புவாங்கி ஏங்கும் இயல்பினை யுடைய அகந்தை யென்னும் ஆமைக்கணங்களோ! வாங்கு அள விறந்தன.

அப்பா! இவ் வகந்தையோ! ஆங்காரத்தால் வருவது இவ் விரண்டாலும் மமதையும் மமதையால லோபமும் லோபத்தால் இச்சையும் இச்சையால் இடம்பமும் இடம்பத்தால் வஞ்சனையும் வஞ்சனையால் அசத்தியமும் ஆக இவைகள் முறையே உதித்துப் பெருகி உட்களங்கந்தந்து நரகத்தே "¡ய்த்துவிடும் இயல்பையுடை யன. இதனுலன்றே! முன்னேர்கள்

அகங்கரிப்பு வரிவெனர்க்கு மறங்கெடுக்குங்
கற்றகல்வி யழிக்குமுள்ளம்
புகைந்தெழுப்புங் கனலைமிகப் புழுங்குவிக்கும்
பிறரைநகை புகுத்துமார்க்குந்
தகைந்துசுவர்க் கத்தினையுந் தடுக்குமகற்றுஞ்
சிறிதுதவஞ் செய்தாலுஞ்
சுகந்தவிர்க்கு மீளாத நரகினுய்க்குமிது நமக்குத்
தூய்மை யன்றே.

(மெய்ஞ்ஞானவிளக்கம்)

என வருளியுள்ளார். ஆகவே சமரசங்கொண்ட புத்தியால் நாளுக்கு நாள் இவ்வகந்தையை அழிக்க முயலவேண்டும்.

மேற்கூறிய உட்களங்கத்தால் அறிவு மாழ்கிய அந்தகாரம் நிறைந்த அறிவின்மையாகிய அறியமுடியாத ஆழம்படைத்த திப் பிறவிப் பேராழியென்றறியக் கடவாய்.

என்னே ! இவ்வஞ்ஞானிகளின் அகம். கல்லாமை கொலை தீமை களவாசையின் சொல்—சொல்லாமை நம்பின்மை சுடுகோப மிவையே—யல்லாம லறமேது மறியார்தமுளமோ ? ஒன்றல்ல, இரண்டல்ல, ஆறறிவு நிறைந்த பகுத்தறிவென்னும் வாலறிவைப் படைத்து வைகும் பண்புடைய மாந்தர் தங்காலத்திற்குள் காணு வதைக் காணாது நிரட்சர குட்சியாய் அறிவுகெட்டு அகத்திற் களிம் பேற்றிக் கடையராவோர் வாழ்வு இக் காசினிக்கு அதிக கனந்தரு மன்றோ !

ஹே அந்தண ! நீ ஆதியிலிருந்த இருப்பென்ன. இப்போ தடைந்துள்ள அறிவென்ன. ஆகையால் மேன்மேலும் அறிவைப் பெருக்கிப் பிரகாசித்து அகங்களித்து வாழ்வதே அந்தத்தில் அவ னடியை அடையும் வழியென் றறிவாய்.

(தொடரும்.)

---

## பக்தி.

பக்தி என்பது மிகவும் சலனமுள்ள நம்மனதை இஷ்டமானதோர் தெய் வத்தினிடம் அன்போடு ஒரு நிலையில் வைப்பதே.

ஆகிலும் மிகவும் சஞ்சலமுள்ள இம்மனதைக் கட்டுவதானது எத்திசையி லும் சமமாய் சஞ்சரிக்கும் வாயுவைக்கட்டி ஓரிடத்தில் நிறுத்துவதைப்போல் மிகவும் சிரம சாத்தியமானது.

பாண்டவர்களுள் நடுப்பிறந்தோனும் கிருஷ்ணனிடம் அதிகம் வாச் ஸல்யமுடையவனும் பக்தியோகத்தை நன்குய் அனுஷ்டித்தவனுமான அர்ஜு னன் பாரதயுத்தத்தின் நடுவில் உபதேசித்த பகவானைப் பார்த்து " சஞ்சலமுள்ள பதார்த்தங்களுள் முதன்மைபான இம்மனதை யடக்குவது, ஓ ஜனார்த்தனு ! வாயுவைக் கட்டுவதைப்போல் சிரமமாக இருக்கிறது. ஒருக்கால் கொஞ்சம் வசப் படுத்த ஆரம்பிக்கும்பொழுதே விஷய வாசனைகளால் இழுக்கப்பட்டுத் திரும்பி விடுகிறது " எனறு கூறினுன். தனஞ்ஜயனை கருணையுள்ள கண்ணபிரான் பார்த்து மனதையடக்குவது சிரமசாத்தியமானதென்றும் பழக்கவழக்கங்களாலும் பூர்வஜனமாந்தர புண்ய பரிபாகத்தினுலும்தான் கைகூடுமென்றும் அருளியதாக பகவத்கீதையில் நன்கு கூறப்படுகிறது.

கல்விச்செல்வத்தை சிறப்புடன் அடைந்திருந்த தாயுமானவரும் அவர் பாடல்கள் அநேகங்களில் ஒன்றில் மிகக்கடினமான அனேகஞ் செயல்களைச்

செயதாலும் செய்யலாம், மனதை யடக்குவது அவைகளிலும் கடிணமான தென்று கருதியே,

“ கந்துக மதக்கரியை வசமாய் நடத்தலாம்
    கரடிவெம் புலிவாயை யுங்
கட்டலா மொரு சிங்கம் முதுகின்மேற் கொள்ளலாம்
    கட்செவி எடுத்தாட்ட லாம்
வெந்தழலி னிரதம்வைத் தைந்துலோ கத்தையும்
    வேதித்து விற்றுண்ண லாம்
வேறொருவர் காணமல் உலகத் துலாவலாம்
    விண்ணவரை ஏவல் கொளலாம்
சந்ததமு மிளமையோ டிருக்கலாம் மற்றொரு
    சரீரத்தி னும்புகுத லாம்
ஜலமேல் நடக்கலாம் கனல்மேல் இருக்கலாம்
    தன்னிகரில் சித்தி பெறலாம்
சிந்தையை யடக்கியே சும்மா விருக்கின்ற
    திறமரிது சத்தாகி யென்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
    தேஜோம யானந் தமே.”

என்று கூறியுள்ளார்.

ஆனாலும் மனதை யடக்குவது மிகச்சிரமமென்று கூறியுள்ளாரே யொழிய முடியாதென்று ஒருவராகிலும் அபிப்ராயப்படவில்லை.

காட்டில் மூங்கில்கள் பற்றிக்கொண்டுத் தீப்பற்றி எரியும்பொழுது வாயு வானது அதற்கனுகூலமாய் அத்தீயை அதிகரிக்கச்செய்கிறது. அதே தீயானது விளக்கு வடிவமாய் நிற்குங் காலையில் வாயுவானது அதற்குப் பிரதிகூலமாய் அதை அணையச் செய்கிறது.

அதைப்போல் மனதானது பகிர்முகப்படுங்காலையில் விஷயவாசனைகளால் ஓங்கிவளர்க்கப்பட்டு அதிகரிக்கிறது. அதேமனதானது அந்தர்முகப்படுங்காலை விஷய வாசனைகளை அடியோடு நாசமாக்கி ஒடுங்கி விடுகிறது.

கௌதமர், ஸ்ரீ சங்கராசாரியார், பட்டிணத்தடிகள்போலுள்ள மற்றும் அநேகம் மஹான்கள் அகப்பற்றற்றுத் தம்பொருளை வெறுத்துத் தன்னைமறந்து தலைவனை அறிந்து மனதை நிலைநிறுத்தி எத்தனையோ காலங்களும் கல்பங்களும் தவம் செய்ததாகப் புராணங்கள் மூலமாய் அறிகிறோம்.

இத்தகைய மேன்மைபெற்றோர் மனதை அடக்காதிருந்திருப்பின் அடைந்த சிறப்பிற் பாதியும் அடைந்திரார்.

இனி பக்தியின் படிகளைக் கூறுவோம்.

அவிவேகத்தில் முழுகும் தருணத்திலிருந்த இப்பூமியை உத்தாரணம் செய்வதற்கென்றே அவதரித்த மஹாபுருஷராகிய ஸ்ரீமத் சங்கராசாரியார் அவர்களும் பக்தியைப்பற்றின அவர் கருத்தை நன்கு வெளியிட்டிருக்கிறார்.

அதாவது;—அழிஞ்சில் விதையானது மரத்திலிருந்து விழுந்த தக்ஷணமே அம்மரத்தை யடைவதுபோலும், ஊசியானது காந்தமென்கிற கல்லை சமீபத்தில் கண்டவுடன் சென்றடைவதுபோலும், கணவனிடத்தில் உள்ளன்போடு கூடிய ஸ்திரீயானவள் தன் பதியை அடைவதுபோலும், கொடிகள் மரத்தை யடைவதுபோலும், நதிகள் சமுத்திரத்தை யடைவதுபோலும் நம்சித்தமானது சகலலோக சரண்யனாகிய ஸ்ரீ பசுபதியை அடைகிறது.

இவ்வைந்து உதாரணங்களும் ஒரே ரீதியாய் இருப்பதாய் வெளிப்படையாய்த்தோன்றினும் உற்றுநோக்கின் வெவ்வேறுவிதங்களாகப்புலப்படும். எவ்வாறெனின் அவர் கூறியுள்ள ஐந்தும் பக்தியின் வெவ்வேறான ஐந்துபடிகள்.

## திருஷ்டாந்தங்கள்.

எறழிஞ்சில் என்னும் மரத்தின் வித்தானது எவ்வாறு கீழே விழுந்ததும் அம்மரத்திலேயே போய் ஒட்டிக்கொள்ளுகிறதோ, அதுபோல் இன்னான்காம் படியிலிருப்பவனுடைய மனமும் ஈசுவரனுடைய சாரூப்யத்தில் ஈடுபட்டதாய் என்னேரமும் இருக்கும். ஆகிலும் பார்ப்பவர்களுக்குச் சத்தை உறிஞ்சியான போதிலும் தோல் ஒட்டிக்கொண்டிருப்பது எப்படி மரம் வேறு வித்துவேறாக இருப்பதாய்த் தோன்றுமோ அதைப்போல் பார்க்கிறவர்களுக்கு இவன்வேறு ஈச்வரன் வேறாகத்தோன்றும். இதுவே ஜீவன் முக்தர்களின் லக்ஷணம்.

ஒரு கொடியானது மரத்தை யடையவேண்டி சாய்ந்து செல்லினும் பெருங் காற்றானது அதைத்தாக்க அதையும் அலக்ஷியம்செய்து எவ்வாறு மறுபடியும் அம்மரத்தை யடைகிறதோ அதைப்போலவே பூர்வஜன்ம சுகிருதத்தாலும் சாதுக்களின் சேர்க்கையாலும் ஈசுவரனைத் தியானிக்கவேண்டு மென்று தோன்றிய மனத்தை யுடையவனான நான் காற்றைப்போல் அசையக்கூடிய விஷயவாசனைகளால் கீழே தள்ளப்படுகிறானாயினும், மறுபடியும் பிரயத்தினங்களால் எழுந்து முயன்று இரண்டாம் படியை அடைகிறான்.

ஊசியானது காந்தமென்கிற கல்லைத் தன் சமீபத்தில் கண்டவுடனே சற்றும் தாமதியாமல் அக்கல்லை அடைவதுபோல், இப்படியிலுள்ளவன் மனோநிலையும், ஈசுவரசிந்தனை வந்த உடன் விஷய வாசனைகளை விட்டுவிலகித் தலைவனிணையடியை நாடிநிற்கும்.

பதியே தெய்வமென்றும் அவர்சொல் நிறைவேற்றுவதே உயர்ந்த தவமென்றும் அவருக்குத் தொண்டுபுரிவதே மேலான பூஜை என்றும் நன்கறிந்த ஸ்திரீயானவள் "தெய்வம் தொழாஅள் கொழுநற்றொழுதெழுவாள்—பெய்யெனப் பெய்யும் மழை" என்றபடியும் "குலமகட்கழகுதன் கொழுநனைப் பேணுதல்" என்றபடியும் எவ்வாறு சதா தன்பதியையே தியானம் செய்துகொண்டு ஊன்றிய மனதுடையவளாய் இருப்பளோ அப்படியே இம்மூன்றாம்படியிலிருப்பவனும் சந்ததமும் தன் சித்தத்தை தீனசரண்யனிடம் அர்ப்பணம் செய்துகொண்டிருப்பான்.

இவன் இதிலிருந்து கடைசியான படியை அடைகிறான். நதிகள் பல பேத

வர்ணங்களும் மஹிமைகளும் உடைத்தானவையாயினும் சமுத்திரத்தை அடைந்த மாத்திரத்தில் எவ்வாறு அபேதமான ஸ்வரூபத்தை யுடையனவாய் ஸமுத்ர மென்ற ஒரேபெயரால் அழைக்கப்படுகிறதோ அதுபோலவே இவ்வைந்தாம்படியி லிருப்பவனும் ஈசுவரஸாரூப்யம் பெற்றவனாய் பேதமற்றவனாய் பிரம்மஸ்வரூப மென்ற ஒரே பெயரை அடைகிறான்.

இத்தகைய மேன்மை பெற்றோரே இரண்டறக்கலந்து நின்றோர் என்று கூறப்படுகின்றனர். (இவ்வைந்துபடிகளும் ஹிந்துபுண்ய கதைகளிலிருந்து எடுத்து எழுதப்பட்டன.)

ஆனால் ஒருமனிதன் பரிபாக பக்குவமடைவதற்கு மேற்கூறிய ஒவ்வொரு படியாய்த்தான் செல்லவேண்டு மென்பதில்லை.

ஒரு வகுப்பில் தேர்ந்த மாணாக்கன் எவ்வாறு அதற்கடுத்த வகுப்பில் சேர்க சப் படுகிறானோ அவ்வாறாகவே பூர்வ ஜென்மகர்ம பரிபாகத்திற் கேற்ப இச் ஜென்மத்தில் பக்தியின் படிகளை அடைகிறான். இது நிற்க,

இத்தகைய பக்தியானது நிஜமாக ஒருவன் மனதில் வேரூன்றி இருக்க வேண்டும். வெளிப்பூச்சுக்காகச் செய்யும் பூஜைகளும் ஆலயம் தொழுவதும் மற்றுமுள்ள கிரியைகளும் யாதொரு பயனும்படா. இதற்கு ஒரு திருஷ்டாந் தக் கதை சொல்லுவோம்.

ஸகலலோக சரண்யனாகிய ஸ்ரீமந்நாராயணனைக் காணப் பேராவலுடன் த்ரிகாலமுமறிந்த நாரதரானவர் வைகுண்டத்திற்கேக பகவானும் புன் சிரிப்போடு கூடினவராய் அவரை நல்வரவேற்று ஆசனத்தமர்த்தி "ஓய் நார தரே! பூலோகத்தில் என்னை ஸதாகாலமும் பக்திசெய்கிற பக்தனொருவன் இருக்கிறான்; அவனை நீர் பார்த்து வரவேண்டுமென்று எனக்கு மிகுந்த அவாவிருக்கின்றது" என்றார். அதைக்கேட்ட நாரதர் விரைந்து சென்று அவர் செப்பிய குடியானவன் மனைக்கேகினார். அவன் அதி காலையில் எழுந்து "நாராயணா, நாராயணா" என்று இரண்டுதரம் சொல்லிவிட்டுப்பின் உழச் சென்றான். பிறகு சாயங்காலம் தன் இல்லத்திற்கேகி மாட்டைப்பட்டியி லடைத்துவிட்டு கண்களை மூடிக்கொண்டு "க்ருஷ்ணா, க்ருஷ்ணா" என்று இருமுறைகூறிச் சாப்பிடச்சென்றான். இதை உற்றுநோக்கிய நாரதரானவர் அதிவேகமாய் பகவானை அடைந்து; "ஹே க்ருஷ்ணா நன்று நன்று நீர் செப் பிய வண்ணமே குடியானவன் மனைக்குச்சென்றேன். அவன் யாதொருபூஜை யும் (அதிதிபூஜை, தேவபூஜை) செய்யவில்லை "க்ருஷ்ணா க்ருஷ்ணா" என்று இருமுறைதான் கூறினான். சதாகாலமும் உந்தன் திருவடிகளை அஷ்டோத்ரம் ஸஹஸ்த்ரார்ச்சனை லக்ஷார்ச்சனை முதலியவைகளால் காலப்படி பூஜிக்கும் பேர் கள் அநேகர் இருக்கிறார்கள். அநேக ஆயிரம் பிராமணர்களுக்கு தானம் கொடுக் கும் கனவான்கள் எவ்வளவோ இருக்கின்றார்கள். அவ்வாறிருக்க, தங்கள் நாமத் தைக் கேவலம் இருமுறை பஜித்த குடியானவனைப் பார்த்து வரச்சொல்லியது யாது காரணம் பற்றி என்று வினவ, பகவானும் அதிக தயவுடன் கூடியவராய் "சகலமும் உய்த்துணர்ந்த முனிசிரேஷ்டரே! கருத்தை என்னிடம் நிலைநாட்

டாமல் எவ்வளவு பூஜைசெய்தாலும் பயனில்லை; யாதொரு புண்ணிய கிருத்தியத்தையும் ஈசுவரார்ப்பணம் செய்யாமல் டம்பத்திற்காகக் கொடுக்கும் தானங்களினாலும் நான் திருப்தி யடைகிறதில்லை. மற்றுமென்னவென்றால், எவன் தன் கருத்தை நிலை நிறுத்தி அதிதீவிரமான பக்தியுடனும் மெய்யன்புடனும் ஆத்மார்த்தமாய் என்னைப் பஜிக்கிறானோ அவன் பக்தியினால் நான் திருப்தி யடைந்தவனாகிறேன். பக்தி என்ற வலைக்கு நான் கட்டுப்பட்டவன். அதனினின்றும் என்னால் விலகமுடியாது" என்று கூறினார். ஆகையால் பக்தியானது முக்கியமாய் பலாபேக்ஷையின்றி செய்யப்படவேண்டியது. இத்தகைய மேன்மைபெற்ற மானிடஜன்மம் எடுத்த நாம் பெறுவதற்கரிய பேரின்பவீட்டை யடைய பக்தி முதலாகிய முக்ய ஸாதனங்களைக் கைப்பற்றவேண்டும். பசியால் வருந்தக் கூடாதென்ற நோக்கமுள்ள நாம் நம்சிறுவர்களை பாலியத்திலிருந்து பொழுதை வீணாக்காமல் படிக்கும்படி ஏவுகிறோம். அவ்வாறிருக்க மோக்ஷ வீடாகிய நிறைந்த வீட்டை யடைய நாம் எவ்வளவுகாலம் சிரமப்படவேண்டும். ஜன்ம ஆரம்பமுதல் முடிவுவரையிலும் சிரமப்பட்டாலும் போதுமானதன்று. அவ்வாறிருக்கக் கொஞ்சம் அறிவுவாய்ந்த நாம் வாழ்நாளை வீணாக்காமல், ஸதாசாரராய், ஸத்குண ஸம்பன்னராய், சாதுக்கள் சங்கத்தில் சேர்ந்தவராய், நம்முன்னோர்கள் சென்ற நல்வழியைக் கடைப்பிடித்து நன்னெறியில் செல்வோமாக. நம்முன் மாதந்தோறும் தோன்றி மன மகிழ்ச்சியுண்டாக்கும் கல்விக்களஞ்சியமாகிய நம் ஆனந்தபோதினியும் மேன்மேலும் மஹிமை பெற்றோங்கி சாங்கோப சங்கமாய் நீடூழி வாழவென்று ஸகலலோக ஸம்ரக்ஷகராகிய நாராயண மூர்த்தியை ப்ரார்த்திப்போமாக.

---

## ஒழுக்கம் உயர்குலம்.

இழுக்குடைய பாட்டி னிசைநன்று சால
ஒழுக்க முயர்குலத்தி னன்று—வழுக்குடைய
வீரத்தினன்று விடாநோய் பழிக்கஞ்சாத்
தாரத்தி னன்று தனி.

ஒழுக்கமெனப்படுவது அவரவர் தம்தம் ஜாதிமதங்களுக் கேற்பட்ட ஆசாரங்களை, அவ்வக்காலங்களில், எவ்வித இடையூறுகளுற்றபோதிலும், கொஞ்சமும் வழுவாமல் பின்பற்றி நடப்பதாம். அதாவது, அப்போதைக்கப்போது அடிக்கடிதோன்றி மறைவனவும், புலன்களைக்கவர்ந்து நம்மை முன்னேறவொட்டாமல் செய்வனவாயுமுள்ள, நாகரீகமெனப் பெயரோடுங் கூடியிருக்கும் செய்கைகளையும் நடையுடை பாவனைகளையும் பின்பற்றி நம்மதிப்பையிழக்காமல், அவரவர்களுடைய முன்னோர்களால் ஏற்படுத்தப்பட்ட விதியின்படிஒழுகி, செய்யும்படி விதித்தவற்றைச்செய்தும், விலக்கியவற்றை நீக்கியும் நடத்தலே நல்லொழுக்க மெனப்படும்.

ஒருவனுடையகுலம் மிகத்தாழ்ந்ததா யிருப்பினும் அவனுடைய ஒழுக்கத்

தால் அவன் மேற்குலத்தவனே யாகின்ருன். அன்றியும் ஒழுக்கம் அவனுக்கு மேன்மையும் சிறப்பும் கொடுக்கின்றது.

“ குணங்கெடில் மணங்கெடும்
குலங்கெடில் நலங்கெடும் ”

என்றபடி ஒருவன் தான் படித்த கல்வியை மறந்தாலும் திரும்பக்கற்றுக்கொள்ளலாம். தொழிலைமறந்தாலுங் கற்றுக்கொள்ளலாம். ஆனல் ஒருவன் தன் ஒழுக்கந் தவறி நடப்பானேல் அவனுக்கேற்பட்ட குலமதிப்பையுமிழந்து நன்னடக்கையால் உறும்பலனுக்கும் அருகனல்லாமல் போகின்ருன்.

“ நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்று மிடும்பை தரும். ”

என்ற திருவள்ளுவர் வாக்கின்படி நல்லொழுக்கம் தருமத்திற்குக் காரணமாகவும் கெட்ட ஒழுக்கம் பாவத்திற்குக் காரணமாகவும் ஆகின்றது. எப்படியெனில் கல்வியினல் அறிவும் அறிவினல் ஒழுக்கமும் உண்டாதல்பற்றி நல்லொழுக்கத்தில் நடப்பவனுக்கு கற்றறிவினலாகிய பயனும், நற்சங்கமும் அதின்பயனக நற்செய்கைகளுக்கு இடமு முண்டாகிறது. தீயொழுக்கத்தினலோ வென்ருல், ‘ என்று மிடும்பைதரும் ’ என்றதனல், இம்மையில் மாத்திரமல்லாமல் மறுமையிலும் துன்பத்தைத் தருவதாகும்.

ஆகவே, பிறர்செய்வதையே பின்பற்றும் சுபாவமுடைய இக்காலத்தில் நாம் மனம்போன போக்கெல்லாம் செல்லாமல் அவரவருடைய வருணசிரம தர்மங்களுக்கு ஒவ்வ நடத்தலே மேன்மையும் சிறப்புமாகும்.

---

## ‘ விவேகமாலா. ’

(426-லது பக்கத்தொடர்ச்சி)

மானுடா, நீ மஹாசக்தியின் அம்சம். இப்பிரபஞ்சமே உனது சிருஷ்டியின்லேசம். இப்படிப் பலபல உண்டாக்கும் ஆற்றலும் உனக்குண்டு. ஆயின் உன்னை நீ மயக்கிக்கொண்டிருக்கிருய். இதுவரை நம்மாலாகும், மேல் ஆகாது என்று எண்ணி எண்ணி உன்னை மட்டுப் படுத்திவிட்டாய். பார் உனது வலிமையை! உனது காற்றிலடிபட்டுப் பறக்கும் இலேசான பஞ்சையோ வேறெதையோ தூக்க, எடுக்க எண்ணுவையேல் உனது கைவழியாக அதற்குப் போதிய சக்தி வெளிவந்து அதைத் தூக்குகின்றது! ஒரு பல நிறையுள்ள இரும்பைத் தூக்க எண்ணுவையேல் அதற்குத் தக்க சக்தி வெளியேற்றுகின்ருய்! ஒருதுலான் தூக்கவென்ருல் அதற்குத்தக்க ஆற்றலும் உன்னிலிருந்தே புறப்படுகின்றது. இப்படி நீ செய்யவேண்டிய வேலைக்குத் தக்கவாறு சக்தியை உன்னிலிருந்து வெளியேற்றும் நீ, ‘ இதற்குமேல் என்னலாகாது ’ என்று உனது வல்லமைக்கு ஒரெல்லையிட்டுக் கொள்கின்ருய்! மட்டுப்படாத உனது சக்தியை மட்டுப் படுத்திக்கொள்கிருய். ஆயின், சில சந்தர்ப்பங்களில், தீப்பற்றிக்கொள்ளல் வெள்ளம்வருதல் போன்ற ஆபத்துக்காலங்களில் நீ பரவசப்படுகிருய் அப்பொழுது உனது ஆற்றலுக்கு எல்லை கட்டிக்கொண்டிருந்த உன்

மனம் மெதுவாக நழுவிவிட, முன் சாதாரணகாலங்களில் தூக்கமுடியாத பெரும் உரல்களும், கதவுகளும், பளுவான சாமான்களும் இப்பொழுது உனக்கு பந்துகள்போல ஆடற்பொருளாகின்றன. ஏறமுடியாத கூறைகளும் சுவர்களும் எளிதில் தாண்டவல்ல சிறுபடிகள் ஆகின்றன.

பரவசம் உனக்கு இத்துணை ஆற்றலை அளிக்கின்றது. ஆயின் உனக்கு இயற்கையில் இல்லாத சக்தியைப் பரவசம் உண்டுபண்ணிவிடுகிறது என்று சந்தேகப்படாதே. 'இல்லது வாராது" உனக்கு உள்ளதுதான். இதுவரை இல்லை இல்லை என்று எண்ணி எண்ணி உன்னைக் குறைத்துக்கொண்டாய். அந்த மனம் பரவசநிலையில் தன்னிலைகெட்டு ஒதுங்கிப்போயிற்று. பலம் தானே வந்தது.

சிலர் இதைப் பழக்கத்தாலே ஓயாத சிந்தனுபலத்தாலே பெற்றுக் கொள்கின்றனர். ஞானிகள், பக்தர்கள் என்ற இவர்களெல்லாம் இவ்வினத்தவரே.

ஆதலின் வல்லவா, உனது வல்லமையில் சந்தேகங்கொண்டு, புழுவாக சக்தியில் உன்னை மட்டுப் படுத்தாதே. அப்பியாசத்தாலோ, பரவசத்தாலோ விரி, விரிந்து உனது மஹா சக்தி வெள்ளத்தை உலகமுழுதும் பிரவஹிக்கச் செய்.

* * * * *
* * * * *

மானுடா, உண்மை காண விரும்புகின்றாய்! பிரபஞ்சம் எப்படி வந்தது? அகண்டிதமான பரம்பொருள் எப்படி நாம் பார்க்குமாறு கண்டிதப்பட்டது? சர்வஞ்ஞனை உண்மை எவ்வாறு கிஞ்சிக்ஞனை மனிதனாயிற்று? என்பதல்லவா உனது கேள்வி? நல்ல கேள்விதான்!

ஆயின், உண்மைகாண விரும்பும் நீ அதற்கான அம்சங்கள் இவையென்று தெரிந்துகொள்ளவேண்டாமா? அவ்வம்சங்களெவை? லௌகிக வியவகாரத்திலே உண்மை காணற்கு உதவியாயிருப்பதெது? இருவர் ஒரு விஷயத்தைப் பற்றி வழக்கிட்டுக்கொண்டு உன்னிடம் வருகிறார்கள். வழக்கின் உண்மை காண விரும்பும் நீ இருவரில் ஒருவரிடத்து விருப்பேனும், வெறுப்பேனும் காட்டுதல் கூடாதல்லவா? ஒருவரிடத்து விருப்பு உண்டாகுமேல் மற்றொருவர் நியாயம் காதிலேறாது. வெறுப்பு உண்டாகுமேல் அவர்வாதமே மனத்தில் தைக்காது. பின் உண்மை காண முடியாது உன் மனப் போக்கின்படி விருப்பாளற்கு இதம் செய்து, வெறுப்பாளற்குக் கேடு விளைப்பாய். ஆதலில் உண்மை காண வேண்டுமேல் விருப்பு வெறுப்பற்ற, பாரபக்ஷமற்ற நிலை உனக்கு இருத்தல் வேண்டும்.

கேவலம் லௌகிக வியவகாரங்களிலேயே இங்ஙனமாயின், பஞ்சேந்திரியங்களாலும் அறிந்தநுபவிக்கும் உலகநடையிலே இப்படியாயின், இவற்றிற் கதீதமான பரமநிலையிலே உன்விசாரிக்கும் அறிவு எப்படியிருக்கவேண்டும். மாசுமறுவற்று, உலகத்திலே விருப்பு வெறுப்பற்று, மனை வீடு வாசல் என்ற சிறு நிலைகளிலே பற்றின்றி ஸ்படிகம் போன்று தெளிந்திருத்தல்வேண்டாமா? ஆம் வேண்டும்! முக்காலும் வேண்டும்?

இதற்காகவே இயம நியம அப்பியாசங்களில் பெரியோர் பழகச்சொல்வது!

மனத்தை இதுவரை பற்றியிருந்த மாசுகள் நீங்க விரதாதிகள் அநுஷ்டிக்கச் சொல்வது !

“இல்லை இந்த வெறுப்பு விருப்போடுகூடிய மனத்திற்கே உண்மை தெரிய வேண்டும். தெரிந்ததே உண்மை” என்பையேல், தெரியும், ஆயின் உன் மனத்திலுள்ள குணங்களின் நிழலிலே தெரியும், பச்சைக்கண்ணாடி போட்டவனுக்குப் பொருளின் உண்மை நிலைதெரியாது எல்லாம் பச்சைப் பசேலென்று தெரிவதுபோல, குணங்களோடு கூடிய உன்மனத்தின் தன்மையால் மூடப்பட்டே உண்மை தெரியும். யதார்த்த நிலை தெரியாது.

மனிதன் எவனும் பிரபஞ்சத்தை அதன் உண்மை நிலையிலே பார்க்கவில்லை. கோபங் குடிகொண்டிருக்கும் மனத்தானுக்கு உலகம் கோபஸ்வரூபத்ததாகத் தெரிகின்றது. ஆசைக்காரனுக்கு “உலகில் ஆசையை ஒழித்தவர் இருத்தல் அரிது; இல்லை.” என்று தோன்றுகிறது. இப்படியே ஒவ்வொருவர்க்கும் வாலிபனுக்கு ஆசைக்களமாகவும் இன்ப நிலையமாகவும், நம்பிக்கைக் கிடமாகவும், கிழவனுக்குத் துன்பக்களமாகவும், ஆசைகாட்டி ஏமாற்றும் மோசக்காரியாகவும் தோற்றுகிறது. பொருள் என்றுதான் பார்ப்பவர் கண்ணுக்கியைந்தாற்போலத் தோன்றுகிறது.

ஆதலின், உண்மை காணவேண்டுமாயின் கண்ணை சுத்தப்படுத்தவேண்டும். மனத்தை சுத்தப்படுத்தவேண்டும். அதனாலேயே சித்த சுத்தியைப்பற்றி இத்துணை தூரம் பெருமையாக அநுபவிகள் சொல்வது. “ மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தற—னாகுலர நீ பிற ”

* * * * *

* * * * * *

இனி, இது அவ்வுண்மை நிலை அநுபவிக்கும் நிலையே யன்றி அறியும் நிலை யில்லை. சர்க்கரை தினந்தோறும் தின்றுகொண் டிருப்பினும் அதன் இனிமை பிறர்க்கெடுத்துச் சொல்ல இயலாதது. இதுவும் அநுபவித்தார்க்குப் பிரத்தியக்ஷம். அநுபவியாதவர்க்குப் பொய். ஆயின் அது ஒரு பேரானந்த நிலையம். இக்களத்தை ஒருமுறை எட்டிப்பார்த்தவர் சதானந்தியாய் குழந்தைகளை யொப்ப அருளிலும் ஆநந்தத்திலும் வளர்ந்துகொண்டே வருகின்றனர்.

அவ்வின்பமும், அவ்வாநந்தமும், உலகவிஷயங்களிலே ஈடுபட்டார் முகத்திலே தோன்றுவதுபோலின்றி துன்பக்கலப்பற்ற பேராநந்தமாகவே இருக்கும்.

கிரீடாதிபதிகளும், லௌகிக சாஸ்திர வல்லவரும் அவ்வாநந்தத்தின் சாயை கூடக் கண்டிருக்கமாட்டார். அத்துணை உயர்ந்தது சுத்தமானது.

இந்தக் களங்கமற்ற ஆநந்தமே ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரது முகத்திலே தாண்டவமாடிக்கொண்டிருந்தது. இந்த உத்கிருஷ்டமான ஆநந்தமே மஹா வாயாடியாய், தனது வியவகாரத்தை அடிக்கும் ஆற்றலுடையார் உலகில் இல்லை என்று செருக்குக்கொண்டிருந்தவரும், இருபதுவயதுக்கு முந்திப் பள்ளிப் பிராயத்திலேயே, மேனாட்டு ஜடசாஸ்திர மேதாவியாகிய ஸ்பென்ஸரைத் திகைக்கப்பண்ணிய தீரரும் ஆகிய விவேகாநந்தரை அடிமைகொண்டது ! இது

உலகசம்பந்தமானதல்ல, மண்தன்மை கலந்ததல்ல, அருள்கலந்தது, துவந்தங் கடந்தது, பின் துன்பந்தராதது, இதுவே பேராநந்தம்! இதுவே மெய்யை அநுபவிப்பார் மெய்ந் நிலை!

இனி மனிதன் இந்த உயர்நிலையைவிசாரிக்க அருகனு? இல்லை. ஏன்? இவனது ஜாக்கிர நிலை, நனவு நிலை, இப்பொழுது இதை வியவகரிக்கும் இந்த நிலை இவனுக்கே நகைப்புக்கிடமான கேவல நிலையெனத் தோன்றுகிறது. இந்த நனவு நிலையிலே, "சென்றதற் கிரங்கவேனும், வருவதற் கேங்கவேனும் செய்தல் அறியாமையாம்" "இருப்பது பொய் போவது மெய்" என்று தெளிவாக அறிந்துகொள்கிறான்.

ஆயின், சென்றதற் கிரங்காமலும் வருவதற் கேங்காமலும் இருக்க இவனால் ஆகவில்லை. இருப்பது மெய் போவது பொய் என்று நம்பி வேலைசெய்கிறான். இது நனவு நிலை ஆமா? அறிவு நிலை என்பது இப்படித்தான் இருக்குமோ?

இல்லை. இது ஜாக்கிர நிலையில்லை. அறிவு நிலையன்று, கனவு நிலையோ வேறெதுவோ நாமறியோம். அறிவில்லை இதில், இதுமட்டும் கண்டோம். ஆயின் இந்த ஏதோ ஒரு அறிவற்ற நிலையிலுள்ள மனிதன் அறிவு நிலையைப் பற்றி விசாரித்தால் தகுதியா? விசாரணை பலன் தருமா?

கனவிலே கண்ட காட்சிகளைப்பற்றி நனவில் உட்கார்ந்து விசாரணை பண்ணுதல் பொருந்துமா! இதுவேனும் ஒருவேளை பொருந்தும், நனவு நிலையைப் பற்றி கனவுநிலையிலே விசாரணை ஓடுமா? மெய்ந்நிலையைப்பற்றி பொய்யாளன் எப்படி அறிதல் இயலும்.

நமது ஜாக்கிரம் என்று சொல்லப்படுகிற இந்தக் கனவுநிலைக்கு, கடவுளை அறிவதைப்பற்றிய மெய்ந்நிலை அர்த்தமாகுமா? ஆகாதே! ஆயின் விசாரிப்பது தவறன்றோ? மெய்யென்று வியவகரித்துக்கண்டதை மெய்யென்று அநுஷ்டிக்க எந்தக் காலத்தில் மனிதனால் ஆமோ, அந்தக்காலத்தில் அவன் கடவுளை அறிவன். அந்தக்காலத்தில் அவன் கடவுளை அன்றி ஒன்றும் காணான்; கடவுளே ஆவன். நனவிலிருந்துகொண்டு கனவை விசாரிக்கவேனும், கனவிலிருந்துகொண்டு கனவை விசாரிக்கவேனும் செய்தல் ஆகாது. இதுபற்றியே, பெரியோரும், "அகண்டிதம் எப்படிக் கண்டிதமாயிற்று" என்ற அசம்பவக் கேள்விக்கு நான் அறியேன் என்று உச்சஸ்வரத்திலே முழங்கி யருளினர். ஆதலின் மானுடா, உன்னால் இதை விசாரித்தல் அருமை. இந்த விசாரணையை விட்டுவிடு. அகண்டிதம் அகண்டிதமாகவே இருக்கின்றது என்று பெரியோர், அநுபவிகள் சொல்வதை நம்பு. (தொடரும்.)

**குறிப்பு:**—மேற்கண்ட விஷயங்கள் பன்முறை வாசித்து சிந்திக்கத்தக்கன. ஆன்மார்த்த சாத்திர ஆராய்ச்சி செய்வோரில் பெரும்பாலார் அதனாலாய பயனையடைய முயல்வதைவிட்டு வீணான தகாதவாதங்களில் காலத்தைக் கழிக்கின்றனர். "மாயையிலிருந்து விடுபட்டபின்பே மாயைவந்தவழிதெரியும். மாயையை யொழிக்கும்வழி கூறப்பட்டிருக்கிறது. அதன்படி அனுபவமாய்ப் பாடுபட்டால் மாயை நீங்கும்" என்று கூறினால் ஆன்றோர்வாக்கை நம்பி யங்

கனமே செய்வதை விட்டுவிட்டு "அதிருக்கட்டும் மாயை யெப்படிவந்தது! சுத்தமான பிரம்மத்தில் அசுத்தமான மாயை யெப்படிவந்தது. ஏன் கடவுள் அதையுண்டாக்கினூர் ?———" என்று இப்படிப்பட்ட வீண்வாதங்களில் காலங் கழிக்கிறூர்கள். இது கீழ்க்காணுமாறிருக்கிறது.

"உன்வீடு தீப்பற்றியெரிகிறது. வீதியின்கோடியில் தீயணைக்கும் இயந் திரமிருக்கிறது. அங்குசென்று கூறினூல் வந்து அணைத்துவிடுவார்கள்" என்று நண்பன் கூறினூல், உடனே துரிதமாயோடித் தீயையணைக்க வழிதேடுவதை விட்டு, "அது கிடக்கட்டும். நன்றூயிருந்த புதுவீட்டில் எப்படித் தீப்பிடித்தது அதை முன்புகூறு. எந்தவிடத்தில் பிடித்தது? தாழ்வாரம் முன்னே பற்றிக் கொண்டதா? கூடத்தறை பற்றிக்கொண்டதா?" என்று கண்டறியமுயலும் அறிவிலியின் செயல்போல் இருக்கிறதன்றி வேறில்லை.

ஆகையால் மேற்கண்ட விஷயங்களை மேற் போக்காய் வாசிப்பதோடு விட்டுவிடாமல் நன்றூய்ச் சிந்தித் துணரவேண்டும். இப்போது நாம் பிரபஞ்ச மாகிய கனவிலிருக்கிறூம். கனவிலிருப்பவர்களுக்கு விழிப்பின் சங்கதியும் தெரியாது; கனவு பொய்யென்பதும் தெரியாது; கனவிலிருக்குமளவும் அக் கனவு உண்மையாகவே தோன்றும்; விழித்த பின்பே அது பொய்யென்று தோன்றி, அக்கனவில் புலியைக்கண்டு நடுங்கிய பயம் நீங்கும்: கனவிலிருக் கும்போது இது கனவு என்று புத்தியிற் பட்டுவிட்டாலோ அப்போது தோன் றும் புலிக்குப் பயப்படவும் மாட்டான். அப்போது அகப்பட்ட புதையலுக்குச் சந்தோஷப்படவும் மாட்டான். ஏனெனில் இரண்டும் பொய்யெனத் தெரி ந்துவிடும். அதோடு உடனே கனவுபோய் விழிப்பு வந்துவிடும். அவனுக்கு அப்புறம் கனவே வராது. எப்போதும் விழிப்பே. (பத்திராதிபர்)

## உபாத்தியாயர்களுக்குச் சில குறிப்புகள்.

உபாத்திமைத் தொழிலென்பதும் குருத் தொழில் என்பதும் ஒன்றே. உபாத்திமைத் தொழில் மற்றைய தொழில்களைவிட மிக்க புண்ணியத் தொழி லாகும். குருவினிடம் கல்வி பயின்று அறிவினூலாய பயனை யடையாவிடில் மானிடவர்க்கம் விலங்குகளுக்குச் சமானமேயாகும். மனிதர் இம்மை மறுமை யாகிய இரு பயன்களையும் அடையச்செய்வது குருவின் தொழிலே யென்றூல் அது எத்தகைய சிறப்பு வாய்ந்ததென்பது தெள்ளிதின் விளங்குகின்றதன்றூ?

ஆனூல், அந்தோ! அத்தகைய தொழில் புரிவோர்க்கு இக்காலத்தில் உற்சாகம் மிகக் குறைவாகவே யிருக்கிறதென்பது யாவருமறிந்த விஷயம். அதிலும் தமிழ்மட்டும் தெரிந்த உபாத்திமார்கள், ஆரம்பக்கல்வி பயிற்றிவைக்கும் உபாத்தி மார்கள் இவர்கள் பரிதாப நிலைமையோ விவரித்துக் கூறினூல் வன்மைபொருந் திய கல்லும் கண்ணீர் உதிர்க்கும். இராஜாங்கத்திலுள்ள மற்ற இலாக்கா உத்தி யோகஸ்தர்களின் சம்பளம் படி பிரயாணச்செலவு முதலிய சௌகரியங்களை விர்த்திசெய்துகொள்ள அவரவர்கள் கூட்டமாய்க்கூடி அதிகாரிகளுக்குத் தெரி வித்துத் தங்கள் குறைகளை யொருவாறு தீர்த்துக்கொள்ளுகிறூர்கள். மேலும் அவர்களில் பெரும்பாலார்க்கு எந்தவழியிலோ சம்பளத்திற்குமேலும் வருமானம் கிடைக்கிறது. உபாத்தியாயர்களுக்கோ அவர்களுக்கேற்பட்டிற்கும் மிகக்குறை ந்த சம்பளத்திற்குமேல் கால்பைசாவாவது கிடைக்க வழியில்லை. பிள்ளைகளுக்கு அன்பும் உற்சாகமுமுண்டாகத் தங்கள் சம்பளத்தில் வேண்டுமாயின் கொஞ்சம் செலவு செய்யலாம். இவர்கள் குறைகளைப்பற்றி விரிவாய் இன்னொரு சமயம் கூற வெண்ணி யிருப்பதால் இங்கு இதோடு நிறுத்துகிறூம்.

இத்தகைய உபாத்தியாயரின் தொழிலோ மற்ற எல்லாத் தொழில்களை விடவும் மிகக் கஷ்டமான தொழில். அதிலும் மாணவர்கள் எவ்வளவிற்கெவ்வளவு சிறுவயதுடையவர்களா யிருக்கிறார்களோ அவ்வளவிற்கவ்வளவு உபாத்தியாயருக்குத் தொல்லை யதிகமே.

ஆனால் இவர்கள் தங்கள்சௌகரியக் குறைவுகளும், மற்றக் கஷ்டங்களும் எவ்வளவிருப்பினும் சகித்துக்கொண்டு தாய் நாட்டின் க்ஷேமாபி விர்த்தியைக் கருதி தங்கள் தொழிலைத் திருப்திகரமாகவே செய்யவேண்டிய கடமையுடையவர்களாயிருக்கிறார்கள். ஆதலால் உபாத்திமார் கவனிக்கவேண்டிய சில முக்கிய விஷயங்களை யீண்டு கூறுகிறோம் :—

1. தம்மிடம் வாசிக்கும் பிள்ளைகளுக்குப் பாடத்தைச் சொல்லிக்கொடுத்து விட்டு, நேற்றுசசொன்ன பாடத்தை வாசித்தார்களாவென்று அங்கொரு பையனை இங்கொரு பையனைக்கேட்டு விடுவதோடு நமது வேலை முடிந்ததென்று உபாத்தியாயர் ஒருபோதும் கருதலாகாது. அப்படி நினைத்தால் அவர் தன் தொழிலைச் செய்தவ ராகமாட்டார்.

பிள்ளைகள் பாடசாலையில் கற்கவேண்டியது கல்விமட்டுமல்ல. நன்னடக்கையும் நல்லொழுக்கமும்கூட அங்குதான் படியவேண்டும். இதையே யுபாத்தியாயர் தன் முதற்றொழிலாய்க் கவனிக்கவேண்டும்.

2. பிள்ளைகளுக்கு நன்னடக்கை நல்லொழுக்கங்களை உபாத்தியாயர் வாயால்மட்டும் போதிப்பதால் பயனுண்டாகாது. தமது செய்கைகளும் தம் போதனைக்கு ஒத்திருக்கும்வண்ணம் நடந்துகொள்ளவேண்டும். ஏனெனில் பன்முறை நாம் ஒரு விதியைக்கூறி அதன்படியவர்களை நடத்தப் பழக்கினும் ஒருமுறை நாமே அவ்விதிக்கு மாறாய் நடப்பதைப் பிள்ளைகள் காணின் நமது குற்றத்தைப் பழக்கிக்கொள்வார்கள். நாம் பன்முறை கூறிய நல்லுபதேசம் பயனற்றதாயொழியும்.

3. கிளிப்பிள்ளைக்கு வார்த்தைகளைக் கற்றுக்கொடுப்பதுபோல் புத்தகத்திலுள்ள பாடத்தைக் கற்றுக்கொடுப்பதே நமது தொழிலென்று உபாத்தியாயர் கருதலாகாது. அவ்வாறு படித்துக் கொடுப்பதாலும் படிப்பதாலும் ஒரு பயனுமில்லை. உபாத்தியாயர் பிள்ளைகளின் அறிவை விசாலப்படுத்த வேண்டுவதைத் தன் தொழிலாய்க் கருதவேண்டும். பிள்ளைகள் சிந்திக்கவும், தாமே தமது குற்றங்களின் காரணங்களைக் கண்டுபிடித்து அவற்றைத் திருத்திக்கொள்ளவும் உபாத்தியாயர் பழக்கிவைக்கவேண்டும்.

ஒருவனுக்கு மரமேறக் கற்றுக்கொடுப்பதென்றால் ஆரம்பத்தில் நமது கையால் தாங்கி உதவுவதோடு மரத்தை யிவ்விதமாய்க் கரங்களால் தாவிப் பற்றவேண்டும் கால்களை யிப்படி வைக்கவேண்டும் என்று அவனுக்குக் கற்றுக்கொடுக்கவேண்டும். அப்படிக்கின்றி நமது கைக்கெட்டுந் தூரம் வரையில் பேசாமல் அவனைத் தாங்கிக்கொண்டே யேறச்செய்தால், நமது கையை நாமெடுத்த வுடனே அவன் நம் தலைமீதே பொத்தென்று தலைகீழாய் விழுவானன்றி ஒரு அடிகூட மேலேறவுமாட்டான், நாம் விட்டவிடத்தில் பற்றியிருக்கவும் மாட்டான்

ஆனால் பிள்ளைகளின் அறிவை விசாலப்படுத்துவது சுலபமான தொழிலல்ல. அதற்கு உபாத்தியாயர் புத்தி தீக்ஷணிய முடையவராகவும், தமது நினைவைத் தமது பிரியப்பட்ட குறித்தவிடத்தில் நிறுத்தப்பழகியவராகவும, சாந்தமுடையவராகவும் பிள்ளைகளின் புத்தியளவைத் துரிதமாயறிந்துகொள்ள வல்லவராகவும் இருத்தல் வேண்டும்.

## சிறுவர்கள் பக்கம்

### "பழமொழிகளின் அநுபவம்"

பழமொழி, என்பது பழைமை, பழைய என்னும் பதத்திலிருந்து தோன்றி னது. பழைமை என்றால் புராதனம் என்று அர்த்தம். அதாவது வெகுகாலத் திற்கு முந்தினது என்பது பொருள். அக்காலத்திலுள்ள நமது முன்னோர் களால் சொல்லப்பட்ட மொழிக்குத்தான் "பழமொழி" என்று பெயர். ஆகவே இப்போது நாம் நூதனமாக ஒன்றும் ஏற்படுத்திக் கொள்ளவுமில்லை, அவைகளை உற்பத்திப் படுத்திச் சொல்வதும் அசாத்தியமானது. தவிரவும் பொருந்தவும் பொருந்தாது.

நாம் எவ்விஷயங்களுக்கும் திருஷ்டாந்தமாவது உபமானமாவது சொல்லு வதாயிருந்தால், நமது முன்னோர்களின் நடவடிக்கைகளையும், ஆசாரங்களையும், மூதுரைகளையுமே சொல்லுகிறோம். ஆகையால் அவை இக்காலத்திலுண் டான கல்வி, நாகரீகம், முதலானவைகளைவிடச் சாலச்சிறந்ததென்று யாம் சொல்லாமலே விளங்கும்.

நமது முன்னோர்களுடைய மூதுரைகளையும், ஆசாரங்களையும், ஒழுக்கங் களையும், சாஸ்திரங்களையும் நம்பாமல் புது நாகரீகத்தை நன்றென்று நம்பி நன்மை, தீமை, பாவ, புண்ணியம் இன்னதென்று அறியாமல், புலன், பொரு ளிழந்து, ஆசாரம் தெய்வபக்தி இவைகளை மறந்து நமனுக்காளாகிறோம்.

சாதாரணமாய் நமது கல்விச்சாலைகளிலுள்ள புஸ்தகங்களில் பழமொழி களையும், ஔவையார் நீதிவாக்கியங்களையும் அறியாதவர்கள் அதிகமில்லை. அவ் வாக்கியங்களிற் பல பலர்க்கு அநுபவசித்தமாய், அவர்கள் நல்வழியில் நடந் தும் வந்திருக்கலாம் என்று நிச்சயமாய் நினைக்கலாம்.

ஆகையால் நம்முன்னோர்களின் நீதிகளையும், பழமொழிகளையும் விளக்க நமது புராண காவியங்களிலுள்ள திருஷ்டாந்தங்களைக் கதாரூபமாய் மாணவர் களுக்குக் கற்பிப்பதால் அவர்களின் அறிவு விருத்தியாவதுடன், ஜாதி, மதப் பற்று, தெய்வபக்தி ஆகிய இவைகள் தானாகவே அமைந்துவிடு மென்பதில் ஐயமுண்டோ! இதனை விளக்க ஒருகதை உண்டு:—

ஒரு பட்டணத்தில் ஓர் அரசன் இருந்தான். அவனுக்கு ஒரு புத்திரன் உண்டு. ஏதோ காலவசத்தால் வேற்றரசன் படையெடுத்துவந்து இவ்வரசனை யுங்கொன்றுராஜ்யத்தையும் கைப்பற்றிக்கொண்டான். பிதாவையிழந்த புத்திரன் தன்மனைவியுடன் வேற்றூருக்குப்போய்க் கூலிவேலைசெய்து ஜீவனம்செய்ய நேரிட்டது. சில பாத்திரங்களும், பனையோலையிலுள்ள ஒரு ஏடுமட்டும் இவ னுக்குத் தகப்பன் ஆஸ்தியாகக் கிடைத்திருந்தது. இவர்கள் காவேரிபுரம் என்னும் ஊருக்குப் போய்ச்சேர்ந்து அங்கு கூலி ஜீவனம்செய்து வந்தார்கள். ஒருநாள் இவன் இப்படிக் கூலிவேலைசெய்து ஜீவனம்செய்வதில் லாபமில்லையென்று எண்ணி ஏதாவது வியாபாரம் செய்து அதினால் பொருள் சம்பாதிக்கலாமென்று யோசித்திருக்கையில் முற்சொன்ன பனையேடு அச்சமயம் திருஷ்டிக்குப்பட் டது. அதை அதுவரை அவன் படித்துப்பார்க்கவில்லை. அவ்வேட்டில் அடியிற் கண்ட பழமொழிகள் எழுதியிருந்தன.

1. "துணையோடல்லது நெடுவழியேகேல்"
2. "பொதுநிலத்தி லொருநாளும் படுக்கவேண்டாம்"
3. "நாலுபேர் சொன்னமொழி தவிர்க்கவேண்டாம்"

4. "பெண்டாட்டியைப் பிறந்தவீட்டுக்கு அடிக்கடி அனுப்பவேண்டாம்"
5. "மனையாளுக் குற்றதொன்றும் உரைக்கவேண்டாம்"

இராஜகுமாரன் இவைகளைப் படித்துப்பார்த்தான். கல்வி யிவனுக்கு அதிகமில்லாவிடினும் கொஞ்சம் புத்திசாலியா யிருந்தபடியால் அப்பழமொழிகளின் உண்மையைப் பரிசோதிக்க ஆவலுற்று, தனது இல்லாளிடம் தான் வேற்றாருக்குப்போய்ச் சம்பாத்தியம் செய்துவருவதாய்க்கூறி கொஞ்சம் கட்டுசாதம் கட்டிக் கொடுக்கும்படி சொல்லி சாதமும்,.ஒருசெம்பில் கொஞ்சம் நல்லதண்ணீரும் எடுத்துக்கொண்டு புறப்பட்டான். துணையில்லாமல் அதிகதூரம் போகலாகாது என்ற வசனத்தை இவன் படித்தவனுகையால் துணைக்குப் பார்த்தான். அவனுக்குத் துணையாரும் அகப்படவில்லை. அருகிலிருந்த ஒரு குளக்கரையில் ஒரு நண்டு இருந்தது. அதை எடுத்து ஜலபாத்திரத்துள் போட்டுக்கொண்டு போனான். வெயிலின் உக்கிரத்தால் சகிக்கமுடியாமல் வழியிலிருந்த ஒரு ஆலமரத்தின் நிழலில் சற்று படுத்திருந்தான். படுத்தவன் நிழல் சௌக்கியமாயிருந்ததாலும் நல்லகாற்று வீசிக்கொண்டிருந்ததாலும் அயர்ந்து நித்திரை செய்தான். அவ்வடவிருக்ஷத்தில் ஒரு அண்டங் காக்கை உண்டு. மரத்தடியில் யாராவது படுத்திருப்பதைக் கண்டால் "கா, கா," என்று மும்முறைகத்தும். அப்போது அப்பாதபத்தில் வசிக்கும் ஒரு நாகஸர்ப்பம் வந்து படுத்திருக்கும் மனிதன் காலைக் கடித்துப்போம். இவ்வாறு வழக்கமாக விருந்தது. அன்றைய தினம் அவ்வாறே காகம்கத்த கட்செவி இவன்காலைக் கடித்துப் போயிற்று. உடனே இவனுக்கு விஷம் தலைக்கேறி மரணமடைந்தான். சற்றுநேரஞ் சென்றவுடன் காக்கை செம்பிலிருந்த நீரைப்பருக தன் மூக்கை உள்ளேவிட்டது. அதிலிருந்த நண்டானது காக்கையின் கழுத்தை இறுக்கிக் கௌவிற்று. உடனே காக்கை முன்போலக் கத்திற்று. ஸர்ப்பமும் முன்போலவே வந்து முன்பு கடித்தவிடத்திலேயே அவனைக் கடித்தது. அப்படிச்செய்ததால் மனிதன் விஷம் நீங்கி நித்திரைசெய்பவன்போல் எழுந்து உட்கார்ந்தான். பாம்பு முன்பு கடித்த விஷத்தைத்தானே உறிஞ்சியதால் அது இறந்தது. நண்டும் காக்கையின் கழுத்தைத் துண்டித்துவிட்டது. இவன் எழுந்தவுடன் பணியும், வாயசமும் செத்துக்கிடந்ததை யோசிக்கலானான். கடைசியில் தனக்கு இன்னின்னவிதமாய் நேரிட்ட ஆபத்தானது இக்கற்கடகத்தி னுதவியால்தான் நீங்கி இம்மைப் பயனை இன்னும் சிலநாளனுபவிக்க நேர்ந்ததென்று உன்னியுன்னிப் பழமொழியின் பெருமையையும், அப்பழமொழியால்தான் பயனடைந்ததுமல்லாமல் பிறருக்கும் பரோபகாரமாக ஏற்பட்டதைப்பற்றி அளவற்ற மகிழ்ச்சியடைந்தான். அருகிலுள்ள அயலூர் ஜனங்களுக்கும் இச்செய்கைதெரிந்து இவனை வெகுவாக நன்குமதித்துத் தெய்வம்போல் பாவித்தார்கள்.

## 2. "பொதுநிலத்தி லொருநாளும் படுக்கவேண்டாம்."

இவன் அக்கம்பக்க கிராமங்களில் மிக்க பஹுமானத்துடனும் உபசாரத்துடனுமிருந்து திருவரங்கம் என்னும் ஒரு ஊருக்குப் புறப்பட்டான். அவ்வூரில் அன்று திருவிழாவானதால் பிரயாணிகள் சத்திரத்தில் போஜனம்செய்துவிட்டு அவ்விடத்திலேயே படுத்து நித்திரைசெய்தார்கள். இவன் பொதுவான ஸ்தலத்தில் படுப்பதுதகாது என்ற வாக்கியத்தைப் படித்திருந்தவனுதலாலும், இதற்கு முன்னுள்ள பழமொழியின் அனுபவத்தில் தேர்ந்தவனுதலாலும், அங்கு படுக்காமல் வேறு ஒரு வீட்டுத்திண்ணையில் போய்ப் படுத்துக்கொண்டான். அன்று இரவில் திருவிழாவில் திருடவந்த கள்ளர்கள் சத்திரத்தில் பெண்டு பிள்ளைகளுடன் படுத்திருக்கும் பிரயாணிகளின் ஆடை யாபரணங்களை யபகரித்துக்கொண்டு ஓடிவிட்டார்கள். மறுநாட் காலையில் இவன் எழுந்து சத்திரத்

திற்கு வந்தான். அங்கு பறிகொடுத்தவர்கள் பரிதபித்துக்கொண் டிருந்ததைப் பார்த்து தனது இரண்டாவது பழமொழியும் அநுபவத்துக்குவந்ததை யோசித்து மிக்க திருப்தியடைந்தான். இதன்மேல் மற்றப் பழமொழிகளையும் பரிசீலனை செய்ய மிக்க அவாவுடன் எதிர்பார்த்திருந்தான். மறுநாள் சூரியோதயத்திற்கு முன் எழுந்திருந்து சாமளாபுரம் என்னும் ஓர் ஊருக்குச்சென்றான்.

### 3. "நாலுபேர் சொல்வதைத் தவிர்க்கவேண்டாம்."

அவ்வூரில் அன்று ஒரு பிரயாணி வந்து தங்கினவன் மகம்மாரி நோயால் இறந்துபோனான். அவனை யெடுத்து அடக்கம்செய்ய அவ்வூரார் ஒருவரும் உடன்படவில்லை. இவன் புதுமனிதன் அங்கு போயிருந்தபடியால் அவவூரார் இப்பிணத்தை யடக்கம் செய்துவிட்டுவந்தால் எல்லாரும் வரிபோட்டு நான்குவராகன் கொடுப்பதாய் வாக்களித்தார்கள். இவனுக்குத் தொத்துநோயின் குணம் இன்னதென்று தெரிந்திருந்தாலும் பழமொழியின் அனுபவத்தை யறிய ஆசையுடையவனாக விருந்ததால், இவ்வார்த்தைக்கு உடன்பட்டு அப்பிரேதத்தை யெடுத்துக்கொண்டுபோய் அடக்கம் செய்கிற சமயத்தில் இறந்தவன் இடையைச்சுற்றிலும் ஒருபை கட்டப்பட்டிருந்ததைக்கண்டு அதை அவிழ்த்துப்பார்த்தான். அதில் சில நோட்டுகளும், பவுன்களும் வெள்ளி நாணயங்களுமிருந்தன. அவைகளை யெல்லாம் அப்படியே தான் எடுத்து வைத்துக்கொண்டான். அவன் உடுத்திருந்த ஆடையில் ஒருமுடிப்பு ஒன்று இருந்தது. அதை அவிழ்த்துப்பார்க்க அதுநவரத்தினங்களின் இனமாகவிருந்தது. அவைகளையும் கைப்பற்றிக்கொண்டு இறந்தவனைப் புதைத்துவிட்டு ஸ்நானம்செய்துவிட்டு ஊருக்குள் நுழைந்தான். அவ்வூரிலிருந்த ஒருபிரபு இவனுக்கு போஜனம்செய்வித்து இவனுக்குத் தாங்களளித்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற அவ்வூராரிடமிருந்து வசூல்செய்து நான்குவராகனையும் கொடுத்துப் புகழ்ந்தார்கள். (தொடரும்.)

---

## ஸ்திரீகள் பக்கம்.

### மாதர் மறுமணம்

இதனைப்பற்றி பலர் பலமாதிரி பேசுகின்றனர். பேசாத இடங்களிருக்குமோ வென்று சந்தேகிக்கவேண்டிய திருக்கிறது. ஆகையால் அதில் நமக்கு வேண்டிய நன்மையைக் கருதி அவரவர்களுக்குத் தோன்றுவதை வெளியிடல் வேண்டுவது அவசியமாயிற்றென்றே கூறவேண்டும். இம்மாதர் மறுமணத்தைப்பற்றி ஸ்ரீமான். K. U. M. குருக்களூர் மலையாள சஞ்சிகையி லெழுதியிருப்பதை ஆதாரமாய் வைத்துக்கொண்டு நமது தமிழ்மக்களும் அறியுமாறு தெரியப்படுத்துவோம்.

புராதன நடவடிக்கைகளுக்கும் வழக்கங்களுக்கும் நவீனரீதியில் ஒரு வித்தியாசத்தைக் காட்டவேண்டுமென்று எண்ணிக்கொண்டிருக்கும் இந்தியர்கள் இவருடைய அபிப்பிராயத்தைத்தழுவித்தா னிருக்கவேண்டிய திருக்கிறது. எதற்காகவென்றால் சக்தியும் சாமர்த்தியமுமுள்ள அநேக மேதாவிகள் பலவிடங்களிலும் சபைநிர்மாணஞ்செய்து ஆசார பரிஷ்கார விஷயத்தைப்பற்றிப் பேசி வருகிறார்கள் என்றாலும் நம் இந்தியர்களுக்கு வேண்டிய ஆசாரங்களின்னதென்று இன்னமும் தீர்மானஞ் செய்திருப்பதாய்க் காணவில்லை.

நம்முடைய ஆசாரமும் பரிஷ்காரமும் ஒரு நல்லஸ்திதியில் வந்து அநுபோக மானால்மட்டுமே நம்தாய் நாட்டிற்கு ஓர் உயர்ந்த பதவிகிடைக்கும். வடநாட்டிலுள்ளார் சிலர் வேறுநாட்டின் ஆசாரத்தைப் பின்பற்றியிருப்பதை எடுத்

துச் சொல்லத்தேவையானதுதான். பரிஷ்காரமென்பது எல்லாரும் அநுசரிக்கத் தக்கதாயிருக்கவேண்டு மென்பதை விசேடமாய் சொல்லவேண்டியதில்லையன்றோ! என்றால் பரிஷ்காரருடைய விஷயங்கள் சிலசமயம் யுக்திக்கும் சாஸ்திரத்துக்கும் விரோதமாயும் அதனை மீறியதாயுமாய் விடுவது இந்துக்களுடைய பாக்கியதோஷமென்றே சொல்லாமல், வேறென்ன சொல்லலாம்.

இவ்வளவுதூரம் சொல்வதற் கிடமானதெல்லாம் சாஸ்திரவிரோதமும் யுக்திக்கு ஒவ்வாததுமான மாதர் மறுமணத்தை வழக்கத்திற்குக் கொண்டுவர வேண்டுமேன்று சில பரிஷ்காரசீலர்கள் கோப்புகூட்டிப் புறப்பட்டதினால்தான் இதிலும் அதிகமாய்ச் சிரத்தை எடுக்கிறவர் வட இந்தியாவில்தா னென்று தெரிகிறது. அவர்களுடைய முயற்சியின் பலனாகச் சில விதவைகளுடைய விவாஹக் கிரியைகளும் நடத்தப்பட்டதாயும் அறிகிறோம். மாதர் மறுமணம் சாஸ்திரத்திற்கும் யுக்திக்கும் சரியாயிருக்குமென்றுதான் அவர்களுடையஅபிப்பிராயம். ஆனால் உண்மை வேறொருவிதத்திற்று னிருக்கிறது. அப்படியிருந்தும் தன் பக்கத்திற்கு அநுகூலமான சில பிரமாணங்களும் மற்றும் சாரமில்லாத யுக்திகளும் சங்கையில்லாமல் உபயோகிக்கப்படுகின்றனவென்று சொல்லாதிருக்கமுடியவில்லை.

அப்படியிருக்க மாதர்மறுமணம் நடப்பிற்குக்கொண்டுவர பிரயாசைப்படுகிறவர் காட்டிச்செய்வதெல்லாம் அசம்பாவிதமா மென்று எவ்வாறு அபிப்பிராயப்படா திருக்கமுடியும். சிலர் மாதர் மறுமணம் கூடாதென்று சொல்வதுபோல நாமும் இச்சமயத்தில் மாதர் மறுமணம் ஒருநாளும் உசிதமானதல்ல வென்று முடித்துவிடாமல் அது எவவாறுதான் சாஸ்திரானு காரணமென்றும் யுக்தி சகிதமென்றும் பார்ப்பதற்குவேண்டிய பொறுப்பாய் விட்டபடியால் முதல் முதல் சாஸ்திரசம்மதமா யிட்டுள்ளதுதானு வென்பதை விசாரித்தறிவோமாக.

"நஷ்டமிர்தே ப்ரவிர்ஜிதே கிலிபேப பதிதே பதௌ !
பஞ்சஸ்வா பல்சுநாரீணும் பதிரன்யோ விதீயதே"

(பர்த்தாவினைக் காணுதிருத்தல், சரமகதியை யடைதல், தேசாந்திரமாய்ப் போய் விடுதல், நபும்ஸகமாய்த் தீர்தல், எதாமோர் காரணத்தால் ⁕ பதிதனுகுதல் என்றிப்படி ஐந்துவித ஆபத்துகள் நேரிட்டால் ஸ்திரீகளுக்கு வேறொரு புருஷனை சுவீகரிக்கலாம்) மேல்கண்ட பிரமாணத்திலுள்ள அர்த்தமிதுவாகும். இது பராசரஸ்மிருதியி லுள்ளது. நாரதஸ்மிருதி முதலாய கிரந்தங்களிலும் இதே அர்த்தத்திலுள்ள சில பிரமாணங்களும் காணப்படுகின்றன.

மாதர் மறுவிவாகம் நடத்துவது உசிதமென்று வாதிக்கிறவர் இப் பராசர வசனம் தங்களுடைய சித்தாந்தத்திற்கு அநுகூலமா யிருக்கிறதென்று நம்பி வருகிறார்கள். அவர்களுடைய செய்கைகள் பூர்வீகமான சித்தாந்தங்களைச் சம்பந்தித்துக் கொஞ்சங்கூட ஆலோசிக்காமல் இந்தப் பிரமாணத்தை வியக்தப்படுத்திப் பேசுவதும் புருஷன் இறந்தால் புனர் விவாகம் ஸ்திரீகளுக்குக் கூடுமென்றும் இதைக்கொண்டே சாதிக்கிறதாயிருக்கிறது. ஸதிரீகள் மறுபுருஷன்மீது கொள்ளுங் காதலுக்கு எதெல்லாங் காரணங்களாகவுண்டோ அதிலொன்றாக புருஷனது மரணத்தைச் சேர்த்திருக்கிறதென்றே அவர்களுடைய அபிப்பிராயம்.

இப்பராசர பிரமாணத்தை வைத்துக்கொண்டு இவ்விதம் அபிப்பிராயப்படுவது சாகசம்போன்றுள்ள விஷயமேயாகும், மற்றுள்ள ஸ்மிருதிக்காரர்களும் இந்த விஷயத்தை அங்கீகரித்திருக்கிறார்களா வென்று பரிசீலனை செய்து பார்க்கவேண்டு மல்லவா?

---

⁕ பதிதன் = குற்றமுள்ளவன் அல்லது இழிவு ஏற்பட்டு இனத்தாரைவிட்டு விலகினவன்.

அவ்வாறு பரிசீலனைசெய்துபார்த்தால் மாதருக்கு மறுவிவாகம் ஓரிடத்திலும் சொல்வதாய்க் காணப்படவில்லை. என்றால், பராசரவசனமும் மற்றும் சுவீகரிக் கத் தக்கதல்லவென்று வருகிறதே என்று சந்தேகிக்கக்கூடாது. ஸ்மிருதியானு சாரணங்களோடு யோசிக்கத்தக்கவிதத்தில் பராசரவசனத்திற்கு அர்த்தங்கொடுக் கிறதாயிருந்தால் விஷயம் விளங்கும். ஆகையால் இந்தப்பிரமாணத்தை வேறொரு விதத்தில் அர்த்தப்படுத்தவேண்டியதும் மேலேசொல்லிய அர்த்தத்தைமட்டும் யதார்த்தமென்று திருப்திப்படாதிருக்க வேண்டுவதுமாகும். இவைகளைப் பின் னர் ஆராய்வோம்.

ஒருவன் அநுசரிக்கவேண்டிய நான்குவித ஆசிரமங்கள் கிர்த்தியங்கள் இவைகளைப்பற்றியுள்ள தத்துவங்கள் முதலியவைகளும் சொல்லப்படுகிற சமஸ் கிருதபாஷையிலே ஆதியான கிரந்தங்கள் கிருஹிய சூத்திரங்கள் முதலானவைக ளாகும்: அவ்வித சூத்திரகிரந்தங்களைப் பின்பற்றிக்கொண்டுதான் மனுமுதலான வர்கள் ஸ்மிருதிகளை நிர்மாணஞ்செய்தனர். அதுகொண்டு மாதர் மறுவிவாக விஷயங்களைப்பற்றி சூத்திரக்காரர்களுடைய அபிப்பிராயம் எப்படியிருக்கிற தென்று முதல் முதல் விசாரிப்போம். சூத்திரக்காரர்கள் மாதர் மறுவிவாகவிதி என்ற சந்தர்ப்பத்தைச் சம்பந்தப்படுத்தி ஒருஇடத்திலும் சொல்லியிருப்பதாய்த் தெரியவில்லை. ஆசுவலாயன மகரிஷி முதலான சூத்திரகர்த்தாக்கள் ஸ்திரீ கள் பர்த்தாவினுடைய மரணத்திற்குப்பின் பிரமசரியத்தை வகிக்கவோ, அல் லது, புருஷனோடுகூட தேகத்தியாகஞ் செய்துகொள்ளவோ செய்யவேண்டு மென்றுகூறி யிருக்கிறார்கள்.

" மிர்தே பர்த்ரி பிர்ம்மச்சரிய ததன்னு வர்ரோகணம் வா "

என்பது. ஆசுவலாயன மஹாரிஷியுடைய சித்தாந்தம். அதன்படி பர்த்தா பர லோகஞ்சென்றால் பதிவிரதாசிரோமணிகளான ஸ்திரீகள் பிர்ம்மச்சரியமோ அல்லது பர்த்தாவோடு தேகத்தியாகமோ செய்யவேண்டுமேயல்லாது வேறே யாதொரு நிவர்த்தியுங் காணப்படவில்லை.

" ததன்னுகமனப் பிர்ம்மச்சரிய வாபத்தே பார்த்திரு காயா : !

என்ற சூத்திரமும் இதற்கு அநுகூலமாயிருக்கிறது. பர்த்தாவினுடைய திரேகத்தை தகனஞ்செய்யும்போது அச்சிகையிலேயே தன்திரேகத்தை தியா கஞ் செய்யவாவது அல்லது பிரம்மச்சரியத்தை அநுசரித்துக்கொண்டு, ஈஸ்வர விசாரணையிலேயே காலம்கழிக்க வேண்டுவதேயாகும் ஸ்திரீகள் செய்ய வேண்டுவது. இம்மாதிரியே எல்லாசூத்திரக்காரர்களும் விதவைகளுக்கு மேல் கண்ட இரண்டுவிதமல்லாமல் வேறொன்றும் சொல்லி யிருப்பதாய்த் தெரிய வில்லை. மனுஸ்மிருதியிலும்

மிர்தே பர்த்தரி ஸ்வாத்வீஸ்திரி பிரம்மச்சரியேவிவஸ்திதா :
ஸ்வர்க்கங்கயேத்யூ புத்ராபி யதாதே பிர்மச்சாரிணும் ;

பர்த்தாவினுடைய மரணத்திற்குப்பின்பு பிரம்மசரியவிரதத்தை அநுஷ்டித்து வருகிற ஸ்திரீகளுக்குச் சந்தானமில்லாமற்போனாலும் பிரம்மச்சாரிகளைப் போலவே சுவர்க்கப்பிராப்தி சித்திக்கும். விதவையான ஸ்திரீ பிரம்மச்சரி யத்தை அநுசரிக்காமல் வேறொருவனைப் பர்த்தாவாக சுவீகரிக்கக்கூடாதென் றும் இந்தமனுஸ்மிருதி வசனங்கொண்டு தெளிவாகிறது.

பரேதே பர்த்தரி ஸ்வீயே பிர்ம்மச்சரியா வலம்பினீ
பதிலோகம் சமாசாத்ய மோததே நாத்ரு சம்சய:

பதிவிரதாதன்மையுள்ள ஸ்திரீ பர்த்தா பரலோகஞ் சென்றபின் பிரமசரியத்தை அநுஷ்டித்துவருவாளானல் அவள் மரணகாலத்தில் பர்த்தாவிற்குக் கிடைத்

துள்ள லோகத்தையடைந்து அபரிமிதமான சந்தோஷத்தை அனுபவிக்கக்கூடியதுமாகும். வியாசவசனத்திலும் பிரம்மச்சரியம்மாத்திரம் காணப்படுகிறது. இதல்லாமல் விதவைக்குப் புனர்விவாகம் நடத்தலாமென்று ஓரிடத்திலும் சொல்லியிருப்பதாய்த் தெரியவில்லை. இந்தவிதமாக ஸ்மிருதிகளெல்லாம் பிரம்மச்சரியத்தை விதித்ததுமல்லாமல் உடன் தேகத்தியாகஞ் செய்யவேண்டுமென்றும் விதித்தாயுமிருக்கிறது.

" மிர்தம் பர்த்தார மாதாய பிராம்மணீ வக்நீமாவிஸேல் "

பரலோகமான பர்த்தாவினை எடுத்துக்கொண்டு பிராம்மணஸ்திரி அக்நியில் பிரவேசித்து ஆத்மத்தியாகஞ் செய்யவேண்டியதேயாகும். ஸ்மிருதிக்காரர்களும் சூத்திரக்காரர்களும் இம்மாதிரியே சொல்லியிருக்கிறார்கள் என்பதை இன்னும் எடுத்துக் காட்டவேண்டியதில்லை. என்றாலிதில் இன்னம் ஒருவிசேடமிருக்கிறது. முதலாவது ஆத்மத்தியாகமும் இரண்டாவது பிரமச்சரியமுமாகத்தான் விதித்திருப்பதாய்க காணப்படுகிறது. ஆகையால் இதில் உத்தமம் மத்திபம் எவையென்பது வேறுசொல்ல வேண்டியதில்லை மேலேசொன்ன ஆசுவலாயனமகரிஷி சூத்திரத்தில் பிரம்மசரியந் தான் பிரதானமாய்ச் சொல்லப்பட்டிருப்பதாய் அபிப்பிராயப்படுவதுமுண்டு. சூரியபுராணத்தில் ஆத்மத்தியாகத்தைத்தான் நிச்சயித்திருக்கிறது. இதனால்தான முன்காலத்தில் ஆத்மத்தியாகமிக்கவிசேடமென்று கொண்டிருக்கிறார்களென்று ஊகிக்கவேண்டும்.

எப்படியானாலும் விதவைகளுக்கு மேலேசொன்ன இரண்டிலொன்றைத்தான் சொல்வதல்லாமல் வேறொன்றைச் சொல்வதற்கும் அநுசரிப்பதற்கு மிடமில்லை என்பதை யாவரும் சம்மதியா திருக்கமுடியுமோ. (தொடரும்)

---

## ஆபரணம் அணிதல்

ஆபரணம் இயற்கையழகை உயர்வு பெறச் செய்வதற்குப் பெண்கள் அணியும் ஓர் பூஷணம். இத்தகைய ஆபரணம் ஈண்டு சிலவுள. 'ஆபரணம்' என்றால் யாவருக்கும் தெற்றெனத் தெரியக்கூடியவை பொன்னாபரணங்களே. இவ்வாபரணங்களினும் மேன்மையும் சிறப்பும் பொருந்திய அணிகலன்கள் சில இருக்கின்றன வென்றாலும், இவைகளைப் பெண்மக்கள் தாம் நினைத்த வண்ணம் அணிவதால் உண்டாகும் சில குறைகளை முதலில் கவனித்துப் பின்னர் அவ்வாபரணங்களைக் கொள்வதால் விளையும் பயனைக் கூறுவாம்.

பெண்களிற் பலர் தாந்தாம் விரும்பிய ஆபரணங்களை யணிவதால் இம்மண்ணுலகில் தாம் அடையக்கூடிய பாக்கியம் வேறு இல்லை யென்று நினைக்கிறார்கள். இது வீண் எண்ணமே. ஏனெனில், இப்படித்தாம் விரும்பிய ஆபரணங்கள் மீது பேராவல் கொள்வது, அனேகமாய்க்குடும்பங்களில் பல மனக் கலக்கம் உண்டுபண்ண ஒரு தூண்டுகோலா யிருப்பதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். தாம் அணியும் ஆடையாபரணங்கள் எதன்பொருட் டென்பதை ஒவ்வொருவரும் சற்றுச் சிந்திப்பார்களாயின் இத்துணைக் கலக்கம் ஏற்படா.

கணவர் கண்டு களிக்கும் பொருட்டே நாயகி தன்னை ஆடையாபரணாதிகளால் அலங்கரிக்கக் கூடுமென்றும், நாயகன் தன்னைவிட்டு அகன்றிருப்பின் அவைகளை யணியாமல் விடுத்துச் சரீரத்தை அழகு செய்யாதிருக்கவேண்டும் என்றும், ஆகையால் கைம்பெண்கள் ஆபரணமணிவது தகாதென்றும் கருத்துக்கொண்ட,

" நாளில்லா நாள் பூத்த நன்மலரும் போலுமே
ஆளில்லா மங்கைக்கு அழகு "

என்ற நமது மூதாபிராட்டியாரின் திருவாக்குக் கொப்பத் தன்னைவைத்து ஒழுக வேண்டுமென்பதைத் தவிர்த்து, பிறர் தன்னை மதிக்கும் பொருட்டு, வீட்டில், எத்தனையோ கஷ்டங்களிருந்தும் ஆபரணங்கள் செய்து அணிந்துகொள்ளவேண் டும் என்ற பேராசை யிருப்பதும் நம் தேசத்துப் பெண்டிர் இயற்கை. இதனால் வரும் துன்பம் சிறிதல்ல. நாள்முழுவதும் வேலைசெய்து களைப்பால் சிறிது இளைப்பாற உட்கார்ந்த தம் கணவரை மனையாட்டிகளிற் சிலர் தாம் விரும்பிய நகைகளைச் செய்து தரும்படி வற்புறுத்தியும், மற்றும் சிலர் தம் குழந்தைகளை ஏவி நிர்ப்பந்தப் படுத்தியும், அதிக துன்பத்திற்காளாக்குகிறார்கள். 'கடனில்லா சோறு கால்வயிறு போதும்' என்னும் மொழியைப் பொய்யாக்காது கடனை வைத்துக்கொண்டும் வயிறு நிரம்பச் சாப்பிடுவதும் போதாதென்று தாம் விரும் பிய ஆபரணங்களை உடல் நிறைய அணிந்து கொள்ளவேண்டு மென்பது என்ன பேதமை! இப்படித் தம் புருடரை அவஸ்தைப்படுத்த அவர்கள் சகிக்கமாட்டாமல் நகையின்பொருட்டுக் கடன்பட்டேனும் விரும்பியதைச் செய்து கொடுக்கச் சில காலம் அதைப் பூண்டு அவர்கள் மகிழ்தல் கூடும். ஆனால், நாயகன், 'கடன் கொண்டார் நெஞ்சம் போலக் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்றவாறு, எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி யெண்ணித் தயங்கிக்கொண் டிருக்க, மனை விக்குத் தான் நகைபூண்ட மகிழ்வும் மகிழாகா தென்பதும், இவன் கடன் தீரா மையால், கடன்கொடுத்தவன் நியாயஸ்தல மூலமாய் வழக்கிட்டுத்தொகைபெறும் போது 'கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது' போல் முன் அணிந்திருந்த ஆபரணங்களையும் கடன்பட்டுச் செய்வித்தவைகளையும் கழற்றிக்கொடுக்கநேரிடும் போது அவளுடைய மனவருத்தம் எப்படி யிருக்குமென்பதும் நாம் சொல்லா மலே விளங்கும். கணவன் மகிழ்தற் பொருட்டே நாயகி நகை யணிகிறாள் என் பதை மெய்யாக்குவது இப்படித்தானோ ? ஆகையால், தான், மகிழ்வதற்குச் தன் கணவனை கஷ்டத்திற் குட்படுத்தாமல் உள்ளது போதுமென்றிருப்பது நல்ல ஸ்திரீயினியல்பு. நிற்க,

'பிறருக்குப் பயன்படத் தாங்கற்றவைகளை உணர்த்தவேண்டும்.'

என்பதைப் பெண்கள் இவ் விஷயத்தில் தங்கள் பெண் குழந்தைகளுக்குக் கசட றக் கற்பிப்பார்கள். இதனால் அவர்களுக்கு பாலியத்திலேயே நகைகளின் மேல் அதிக ஆசை உண்டாகி விடுகிறது. 'தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்' என்ப தற்கிணங்க குழந்தைகளை இவ்வாசை பெரியவர்களாகியும் விட்டுப் போவதில்லை. இதனால் விளையும்துன்பமோ பல. விவாகமாயும் ஆபரணத்தின்மே லிருக்குமன்பு ஆடவரிடத்தி லிருப்பதில்லை. யாதுவேலை செயினும், " நாம் என்ன நகை யணிந்து கொள்ளலாம். நம் பர்த்தாவை எதைச் செய்து தரச்சொல்லலாம். யார் புதிய நகை அணிந்திருக்கிறார்கள்," என்ற இவை போன்ற மனோ ராஜ்யங்களி லேயே மனதைச் செலுத்துகிறார்கள். குடும்பகாரியங்கள் எக்கேடு கெட்டாலும் இவர்கள் கவனிப்பவரல்லர். இதற்குக் காரணம் இவர்கள் தாய்களே. குழந் தைப் பருவத்திலேயே இவ்வித விஷயங்களில் ஆசை காட்டாமல் தாய்மார் ஒவ் வொருவரும் கவனித்திருப்பார்களாயின், அநேகமாய் இவ்வித விந்தைகள் ஏற் படாமற் போகக்கூடும். (தொடரும்)

குறிப்பு.—இப்போது சேரும் சந்தாதாரர்களுக்குக் குறைவாக அனுப்பப் படும் சஞ்சிகைகள் 2-ம் முறை யச்சியற்றப்படுகின்றன. சீக்கிரத் தில் அவரவர்கட்கு அனுப்பப்படும். (பத்திராதிபர்.)

## வைத்தியக் குறிப்பு.

(434-வது பக்கத்தொடர்ச்சி)

சென்ற வியாசத்தில் டாக்டர் லக்ஷ்மிபதி நாயுடு பி. எ., எம். பி. சி. எம். என்னும் நிபுணரால் கூறப்பட்ட கொண்டகசிந்து என்னும் மருந்தும் அவற்றின் குணமும் சிறிது கூறுவாம். கொண்டகசிந்து என்பது தெலுங்குவார்த்தை அதற்குத் தமிழில் மிளகரணை வேர் என்று பெயர். இந்த வேர்ப்பட்டையால் முறைக்காய்ச்சல், குளிர்காய்ச்சல், சாதாரண பித்தசுரங்கள் முதலானவைகள் நீங்கும். அது சில சமயங்களில் குன்மவியாதிகளையும் கண்டிக்கின்றது.

### உபயோகிக்கும் விதம்.

கஷாயம், திராவகம், சாதாரணத்தூள் செய்துகொண்டும் உபயோகிக்கலாம். கஷாயம், வேர்ப்பட்டையை ஒன்றிரண்டாய் இடித்து 4 பலம் எடுத்துக் கொண்டு ½ படி சலம்விட்டு சிறுதீயாய் ¼ படியாக சுண்டக் காய்ச்சிக்கொண்டு வடிகட்டி வைத்துக்கொள்ளவும். திராவகம் முன்போன்ற பவுடர் 4 பலம் எடுத்து (Rectified spirit) ரெக்டிபைட் ஸ்பிரிட் 1 பவுண்டில் போட்டு 7 நாள் ஊறவைத்து வடிகட்டி எடுத்துக்கொள்ளவும். 1 பவுண்டுக்கு குறையுமானால் குறைந்த அளவுக்கு Spirit சேர்த்துக்கொள்ளவும். சூரணம் சாதாரணத்தூளை நன்றாய் இடித்து வஸ்திரத்தால் வஸ்திரகாயம் செய்துவைத்துக்கொள்ளவும்.

### உபயோகிக்கும் அளவு

கஷாயம் 2 முதல் 6 அவுன்சு வரையில் கொடுக்கலாம். திராவகம் 2 முதல் 4 டிராம் வரையில் கொடுக்கலாம், பவுடர் 1 முதல் 2 டிராம் வரையில் கொடுக்கலாம். நாள் ஒன்றிற்கு 3 தரம் கொடுக்கலாம். இந்த ஔடதத்திற்குச் சமமான இங்கிலீஷ் ஔடதங்கள் எதுவெனயோசிக்கில், இந்தப்பட்டையானது சாதாரணமாய்த் தற்காலத்தில் உபயோகிததுவரும் கொய்னு, சின்கோனு, வார்பர்க்ஸ் டிஸ்சர், பல்விஸ் ஜேகபிவீரா, ஜேம்ஸ் பவுடர் இவைகளைக்காட்டிலும் உயர்ந்தவையென்று சொல்லாவிட்டாலும் சமமானவையாய் ஒத்துக்கொண்டாலும் கொய்னுவால் ஏற்படும் பித்தம், மயக்கம், காதடைப்பு, செவி இறைச்சல் முதலான துர்குணங்கள் இதன்பாலில்லாமையால் அதனிலும் இது விசேஷமென்பதில் என்ன சந்தேகம்.

கொய்னுவும் ஆர்சனிக்கும் சேர்ந்த மருந்துகளால் நிவர்த்தியாகாத அனேக விஷ சுரங்களை இந்த ஔடதமானது நிவர்த்திசெய்திருக்கின்றது.

---

## கற்கோட்டை—நாவல்.

(439-ம் பக்கத் தொடர்ச்சி)

### 9-வது அத்தியாயம்

முன் அத்தியாயத்தில் கூறப்பட்ட சம்பவங்கள்நடந்து ஒருமாதங்கழிந்தது. வசந்தகாலந்தொடங்கிவிட்டதால் விருட்சஙகளில் மலர்கள் நிறைந்து மிக்க இரமணீகரமாயிருந்தது. இளந்தென்றற்காற்று மலர்களிலுள்ள நறுமணத்தைவாரியெங்கும் வீசிககொண்டிருந்தது. ஒருநாள் காப்டென் அமிர்தலிஙஎன்று மறுபெயர் வைத்துக்கொண்ட அம்பலவாணன் இலக்ஷ்மிநகர்என்ற நகரத்திற்குச்

சுமார் முப்பதுமைல்தூரத்தில் குதிரைமேல் சென்றுகொண்டிருக்கிறான். அவன் சைனியத்திலிருந்தபோது அவனோடுகூடவிருந்த இரண்டுவாலிபர் அவன் காவலாட்களாய்ச் செல்கிறார்கள். அவர்களில் ஒருவன்பெயர் கவசம், மற்றவன் பெயர் கேடயம். அவர்களும் தங்கள் எஜமானனைப்போலவே இருபத்திரண்டு வயதுடையவர்கள். அவர்களிருவரும் எஜமானனிடம் மிக்க அன்புடையவர்கள். மேற்கூறப்பட்ட பெயர்கள் மாறுபெயர்களே.

இவர்கள் செல்லும் பாதை இருபுறங்களும் விருட்சங்களை யுடையதாய் இருந்ததோடு மிகநெருக்கமானதாயிருந்தது. அம்பலவாணன் பத்துகெஜம் முன்னும் இரண்டாட்களும் பின்னுமாய்ச் சென்றுகொண்டிருக்கிறார்கள். அச்சமயம் பின்னாலிருந்து குதிரைகள்வரும் காலடிச்சத்தம் இவர்கள் செவிகளில் விழுந்தது. பின்னால் வருகிறவர்களும் மூன்றுபேரே. ஒருவன் சற்று முன்னும் இருவர் பின்னுமாய் வந்துகொண்டிருந்தார்கள். கவசம் கேடயம் இருவரும் அச்சிறுபாதையில் வரிசையாய்ச் சென்றுகொண்டிருந்ததாலும், பின்னால் வருபவர்செல்ல இவர்கள் விலகி வழிவிடாததாலும் பின்னால் வருபவர்களில் முன்னே இருந்தவன் அவர்களை விளித்து “அடேபயல்களே! வழியைவிட்டு விலகுங்கள். ஆ! இன்னும் விலகாமலாயிருக்கிறீர்கள். உங்கள் அகங்காரத்திற்காக உங்களைத் தண்டிக்கவேண்டும்” என்றான்.

முன்னேசெல்லும் அம்பலவாணன் இம்மொழிகளைக்கேட்டதும் சட்டென்று திரும்பி அம்மனிதன் அருகிற்சென்று “ஓ கெருவியே! என் ஆட்களைப்பார்த்தா அவ்வாறு கூறினை?” என்றான்.

வந்தவனும் ஓர்வீரனுதலால் மிக்க அலட்சியமாகவே “ஆகா, தடையின்றி. அவர்கள் இம்மாதிரி ஒழுங்கீனமாய் நடப்பது உன்பயிற்சியாலாயின் உனக்கும் அப்படியேதான் கூறுவேன்” என்றான்.

அம்பலவாணன் “என்னிடம் நீ இப்படித் துணிகரமாய்ப் பேசுவதைப் பார்த்தால் நீ யுன் உயிரைச் சுத்த அலட்சியமாய் மதித்திருக்கிறாயென்று நினைக்கிறேன். ஆகையால் நீ அப்படிக் கூறியதற்காக மன்னிப்பு கேட்டுக்கொண்ட பிறகே இந்தவிடத்தைக் கடந்துசெல்ல அனுமதி யளிப்பேன்” என்றான்.

இம்மொழிகளைக் கேட்டதே அந்தவீரன் கோபமடைந்து “பொடிப் பயலே, எட்டநில். இன்றேல், இரண்டுநிமிடங்களில் உன் அதிகப்பிரசங்கத்திற்குத் தக்க தண்டனை கிடைக்கும்” என்றான். மறுநிமிடம் இருவரும் இடையிலிருந்த தங்கள் உடைவாட்களை யுருவிக்கொண்டு ஒருவன்மேல் ஒருவர் பாய்ந்தார்கள்.

வந்தவீரனுக்கு வயது முப்பத்தாறிருக்கும். அவன் உருவம் கெம்பீரமான உருவமே. அவன் முகக்குறி அவன் தான் ஒருபெரிய அந்தஸ்துடையவன் என்ற சுயமதிப்புடையவன் என்று விளக்கிற்று. எஜமான்களாகிய இருவரும் யுத்தத்திற்குத் தொடங்கியதே அவர்கள்கூடவந்த ஆட்களும் சண்டையிட வாரம்பித்தார்கள்.

சற்றுநேரம் சண்டை நடந்தபோது வந்த புதுமனிதன் நமது அம்பலவாணனுடைய வயதைக்கருதி இவனோடு இன்னேரமா நாம் யுத்தம்செய்வதென்று ஆத்திரத்தோடு அவன்மேல் பாய்ந்தான். அம்பலவாணனோ நிதானமாகயிருந்ததால் மற்றவன் எச்சரிக்கை யிழந்த சமயம்பார்த்துப் பாய்ந்து சட்டென்று தன் இடதுகரத்தால் அவனுடைய வலதுகையின் மணிக்கட்டைப் பிடித்து மேலே தூக்கிக்கொண்டு வலதுகையிலிருந்த தன் கத்தியை அவ்வீரன் மார்பில்

வைத்து அழுத்த முயன்ருன். அவ்வீரன் ஜேணத்தில் பின்சாய்ந்தபடி தன் கையிலிருந்த கத்தியை நழுவவிட்டு விரல்களால் ஒருவித சமிக்கைசெய்தான்.

அதைக்கண்ட வுடனே அம்பலவாணன், ஹா! என்று தன்வாளை யுறை யிற் சொருகிவிட்டு அவ்வீரனுடைய கரத்தைப் பிடித்துக்கொண்டதே இருவரும் துரிதமாய் இரண்டொரு சொற்களைப் பேசினர்கள். மறுநிமிடம் அவர்களு டைய விரோதமும் கோபமும் அடியோடு பறந்துபோய்விட்டன. வந்த வீரன், "நானே முதலில் கோபமூட்டக் காரணமாயிருந்தவனுதலால் நானே மன்னிப்பு கேட்டுக்கொள்ள வேண்டியவன்" என்ருன்.

அம்பலவாணன், "இனி நடந்த சங்கதியைப்பற்றி ஒருவார்த்தைகூடப் பேசவேண்டாம். அது பழங்கதையாய்முடிந்தது. நமது ஆட்களின் சண்டையை நிறுத்துவோம்" என்ருன். இருவரும் உடனே வேலையாட்கள் இருக்குமிடம் சென்று அவர்கள் சண்டையை நிறுத்தி அவர்களையும் சினேகராயிருக்கும்படி கட்டளையிட்டுத் தங்கள் பிரயாணத்தைத் தொடங்கினர்கள்.

வீரர் இருவரும் சற்று முன்னே செல்ல அவர்களுடைய ஆட்கள் நால் வரும் சற்று தூரம் பின்னுல் சென்ருர்கள். புதுவீரன் அம்பலவாணனை நோக்கி, "என் பிராணனை யெனக்குப் பரிசாயளித்தவரும் நமது இரகசிய சங்கத்தைச் சேர்ந்த சகோதரருமாகிய தங்கள் நாமதேயம் என்னவோ?" என்ருன்.

அம்பலவாணன்:—என்பெயர் அம்பலவாணன் என்ருன்.

புதுவீரன் "என்பெயர் பிரபலஸிங்கன்" என்ருன். பிறகு இருவரும் தாங்கள் பாஞ்சாலநாட்டின் சேனையில் உத்தியோகம் செய்ததைப்பற்றியும் மற்ற விஷயங்களையும்பற்றிப் பேசியபின்னர் பிரபலஸிங்கன் "நான் குருவனத்தில் இராவுதங்க உத்தேசித்திருக்கிறேன். அது இங்கிருந்து நாலைந்து மைல் தூரத்தி லிருக்கிறதென்று நினைக்கிறேன்" என்ருன். அம்பலவாணன், ஆ, நானும் அங்கேதான் தங்கப்போகிறேன் என்ருன். மற்றவன் அப்படியானுல் அது வரையில் நாம் ஒன்ருய்ச் செல்லலாம் என்ருன்.

அம்பலவாணன்:—அதற்கப்புறம்?

பிரபலஸிங்கன்:—அப்புறம் சங்கதியா. அது பார்த்துக்கொள்வோம் எப் படியோ.

அம்பலவாணன் சற்று மனவருத்தமடைந்து, "தாங்கள் எங்கு செல்கிறீ ரென்று தெரிந்துகொள்ளவேண்டுமென்ருவது, வலியத் தங்கள் கூடவரவேண்டு மென்ருவது நான் நினைத்துக் கேட்கவில்லை. சினேகித வாஞ்சையால் அப் படிக்கேட்க நேர்ந்தது" என்ருன்.

பிர:—நண்பரே! தங்களுக்கு மனவருத்தமுண்டாக வேண்டுமென்று நான் அப்படிக் கூறவில்லை. இக்காலத்தில் எப்படிப்பட்டவர்களிடம் சினேகம் நேர்ந்தாலும் அவர்கள் இன்னுரென்று நன்ருய்த் தெரியாதவரையில் திட ரென்று எதையும் கூறிவிடாது எச்சரிக்கையாயிருக்கவேண்டியது அவ சியமாகிறது.

அம்பல:—ஆம், ஆம். உண்மையே. இக்காலத்தில் எவ்வளவு எச்சரிக்கையாயி னும் அவசியமே.

பிர பல:—ஐயோ! இக்காலத்தில் எத்தனேயோ மாறுபெயர்கள் கொண்ட பிரபுக்களும், வீரர்களும், பெரிய சீமான்களும் இருக்கவேண்டியது அவ சியமாய் நேர்ந்து விட்டிருக்கிறது. நாம் திடீரென்று சந்திக்கும் ஒரு ஆசாமியே இப்போது தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டிருக்கும் பிரபுக்களில்

ஒருவரா யில்லையென்று நமக்கெப்படி தெரியும்? அப்படிப்பட்ட ஒருவரோடு சேருவதும் அவர்களுக்கு இடங்கொடுப்பதும் இராஜத் துரோக குற்றமாய் முடியும்.

அம்பலவாணன் அவனை உற்றுநோக்கினான். ஏனெனில் பிரபலஸிங்கன் கூறியதில் ஏதோ குறிப்பான அர்த்தம் இருப்பதாய் அவன் மனதிற்பட்டது.

**பிரபலஸிங்கன்:**—"நமது நாட்டிலிருந்து அனேகர் தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டிருக்கிறார்கள். சாமிநாதம் பிரபு, பட்டாபிராம் பிரபு, அவர் சகோதரர்கள் இருவர், கேசவபுரம் வாலிப ஜமீன்தாராகிய கண்ணபிரான் பிரபு...... ......" என்றதே,

**அம்பலவாணன்:**—"தேவபுரி ஜாகிர்தார் திரவிய சிங்கம்பிரபு, அவருடைய இரண்டு வாலிப சகோதரர்கள்" என்றான்.

**பிரபல:**—ஆம் இன்னும் அனேகர் இருக்கிறார்கள். சரி, கிடக்கட்டும் நாம் நமக்குச் சம்பந்தமில்லாத சம்பாஷணையில் நுழைந்து விட்டோம்.

அம்பலவாணன் "ஆம். இக்காலத்தில் புதிதாய்ச் சந்திக்கும் ஒரு மனிதனிடம் திடீரென்று நம்பிக்கை வைத்து விடலாகாது" என்ற உமது தீர்மானத்தில் மேல் சம்பாஷணை யப்படி திரும்பி விட்டது.

மறுபடி இருவரும் ஒருவரை யொருவர் உற்று நோக்கினார்கள். எதிரி தன் சுயப்பெயரை மறைத்து மாறுபெயர் வைத்துக்கொண் டிருக்கிறானென்று இருவர் மனதிலும் தோன்றியது. ஒவ்வொருவனும் "நீ மாறுபெயரோ டிருக்கிறாய். நானும் அப்படியே" என்று கூறுவதைப்போல் ஒருவனை யொருவன் நோக்கினான். ஆனால் ஒருவனுக்காவது உண்மையை வெளியிடத் துணிகாமில்லை.

பிறகு இருவரும் வழியில் பேசிக்கொண்டே செல்கையில் பாஞ்சால நாட்டில் இருவரும் போர்வீரரா யிருந்தபோது நேர்ந்த அதிசயமான சங்கதிகளைப் பற்றி ஒருவருக்கொருவர் கூறிக்கொண்டே சென்றார்கள். பிரபலசிங்கன் "ஆ இப்போது நாம் பேசிய விஷயங்கள் எல்லாவற்றையும் விட ஒரு மிக்க ஆச்சரியமான சங்கதி யென் அனுபவத்திலேயே நடந்ததைக் கூறுவேன்" என்றான்.

**அம்பலவாணன்:**—"ஆ, அப்படியாயின் அதைக் கேட்க மிக்க பிரியப்படுகிறேன்" என்றான்.

**பிரபலஸிங்கன்:**—"ஹா! நான் அதை வெளியிட்டிருக்கலாகாது. ஆயினும் இவ்வளவு தூரம் கூறிவிட்டு உனக்கு ஆவலை யுண்டாக்கி விட்டபின் சொல்லாமலிருப்பது நியாயமல்ல. ஆனால் பெயர் இடம் முதலியவைகளை யெல்லாம் மறைவாகத்தான் கூறவேண்டும்" என்று கூறிவிட்டுப் பின்வரும் சமாசாரத்தை இயம்பத் தொடங்கினான்:—

"ஒரு மாகாணத்தில் செல்வவந்தராகிய பிரபு ஒருவர் இருக்கிறார். அவர் என் சுற்றத்தார், சுமார் இரண்டு மாதங்களுக்கு முன் அவரிடம் ஒரு விஷயத்தைக் குறித்து ஆலோசனை கேட்கவும் அவருடைய உதவியைப் பெறவும் விரும்பித் தனியே அவர் மாளிகைக்குச் சென்றேன். அச்சமயம் மாலை 5–மணியிருக்கும். என் சுற்றத்தார் என்னை அன்போடு வரவேற்று உபசரித்தார். மிக்க உயர்தரமான போஜனம் பரிமாறப்பட்டது. என் பந்துவுக்கு மனைவியில்லை. வீட்டில் அவர் புத்திரனுமில்லை. ஆகையால் நானும் அவரும் மட்டுமே போஜனத்திற்கு உட்கார்ந்தோம். வயது முதிர்ந்த அவருடையவீட்டுத் தலைமைக் காரியஸ்தனே எதிரிலிருந்து உபசரித்தான். அம்முதியோன் எனக்குப் பட்சத்

தோடு அருமையான பதார்த்தங்களை வட்டித்தான். அவன் விஷயத்தில் என் மனதில் நன்றியுண்டாயிற்று. ஆகையால் நான் பன்முறையவன்முகத்தை யன்போடு கவனிக்கநேர்ந்தது. அதனால் சற்று நேரத்திற்குள் அவன் நமது சகோதரசங்கத்தைச் சேர்ந்தவனென்று எனக்குத்தெரிந்துவிட்டது. அதுவே தெய்வாதீனமாய் எனக்கு நற்காலமாயிற்று. இன்றேல் நான் இப்போது உம்மைச்சந்திப்பதும் பேசுவதும் சம்பவித்திருக்க முடியாது.

போசனம் முடிந்தபின் நானும் என் சுற்றத்தாரும் சம்பாஷணைசெய்த போது அவர் என்னிடத்தில்காட்டிய அன்பும் என்க்ஷேமாபிவிர்த்தியில் எடுத்துக்கொண்ட அக்கரையும் எனக்கு ஆனந்தத்தையுண்டாக்கின. இனிமேல் நமக்கு எப்போதும் நல்லகாலமே என்று நினைத்துக்கொண்டேன். கடைசியில் சயனகாலம் நெருங்கிவிட்டது. உடனே காரியஸ்தன் இரண்டு ஆட்களோடு அங்குவந்தான். அவன் ஒரு கிண்ணம்நிறைந்த பாலைத் தன் எஜமானனிடமளித்து அவர் அதை யருந்த ஆரம்பிக்கையில் சற்று தூரத்தில் உட்கார்ந்திருக்கும் என்னிடம் ஒரு கிண்ணம்பாலைக்கொண்டுவந்துகொடுத்தான். அச்சமயம் அவன் முதுகு என்சுற்றத்தார்பக்கம் இருந்தது. அவன் என்முன்நிற்கிறான் ஆகையால் அவன்முகமாவது என்முகமாவது அவருக்குத்தெரியாது. நான் அக்கிழவன் தற்செயலாய் அப்படிநின்றானென்றே முதலில் எண்ணினேன். ஓ கடவுளே, அது அவன் தன் உயிருக்குத் துணிந்து என் உயிரைக்காப்பதற்காக வேணுமென்றே செய்தசெய்கையென்று அச்சமயம்தெரியாது. ஆகையால் அவன் பாலை யென்னிடமளிக்கக் குனிந்தபோது மெதுவாய்க்கூறிய மொழிகளைக்கேட்டதே திடுக்கிட்டுவிட்டேன். அவன் கூறிய மொழிகள்,

"ஜாக்கிரதையாயிரு. உன் உயிர்தப்பவேண்டுமாயின் 13-வது படிக்கட்டின் மேல் காலைவைக்காதே பத்திரம்" என்பவைகளே.

இம்மொழிகளைக்கேட்டதே ஆபத்து நேரிடப்போகிறதென்றும் அதற்குக் கர்த்தா என் சுற்றத்தானே யென்றும், படுக்கைக்குச்செல்லும்போது மேல் மாடியிலிருக்கும் ஒரு அறைக்கு நாம் போகவேண்டுமென்றும் அதற்குச்செல்லும் படிகளில் 13-வது படியில் அந்த ஆபத்து நேரிடப்போகிறதென்றும், அதில் கால்வைக்காமல் சாக்கிரதையாயிருந்தால் நம்முயிர்தக்குமென்றும் என்மனதில் ஏககாலத்தில் பட்டுவிட்டது.

நான் பாலை யருந்தியதே அவ்வயோதிகன் "நான் நமது சகோதர சங்கத்திற்காக உனக்கு இதைக்கூறினேன். பத்திரம் அதை அசட்டைசெய்யாதே" என்று சமிக்கையாய்க் கூறிவிட்டுச் வெளியிற்சென்றான். அதன்பிறகு என் சுற்றத்தார் அங்கிருந்த இரண்டு மெழுகு வத்திகளையெடுத்து ஏத்தி ஒன்றை யென்னிடமளித்து ஒன்றைத் தான் கையிலேந்திக்கொண்டு சயன அறைக்கு என்னை யழைத்துக்கொண்டு புறப்பட்டார். அந்த மெழுகுவத்திகள் சிங்க சிரசின் உருவம்போல் செய்யப்பட்ட கெட்டிபித்தளைக் கைப்பிடிகளில் சொருகப்பட்டிருந்தன. அப்போது என் சுற்றத்தானுடைய புன்னகைபொருந்திய சாந்தமான வதனத்தைப்பார்த்தால் உள்ளத்தில் கொலைப்பாதகச் சிந்தனைகொண்டிருக்கிறானென்று ஒருவரேனும் கூறமுடியாது. அது அவன் நெஞ்சில் எவ்வளவு ஆழத்திலிருந்ததோ தெரியாது.

என் சுற்றத்தான் என்னைப் போஜன அறையைவிட்டு ஒரு பெரிய கூடத்தின் வழியாய் அழைத்துச் சென்றான். பிறகு ஒரு நீண்ட தாழ்வாரம் போன்ற பாதையே சென்றோம். அங்கு ஒரு இரும்பு விளக்கு தொங்கவிடப்பட்டிருந்தது. அப்பாதையின் கோடியில் ஒரு கதவிருந்தது. அதை என் பந்து திறந்தார். அங்கு மேலேறிச் செல்லும் படிகளிருந்தன. என் சுற்றத்தார் அங்கு